# கேள்விக்குறியும் ஆச்சரியக்குறியாக மாறும்



சி.அபிராமசுந்தரி

கேள்விக்குறியும் ஆச்சரியக்குறியாக மாறும்

# கேள்விக்குறியும் ஆச்சரியக்குறியாக மாறும்

செல்வி. சி. அபிராமசுந்தரி

# கேள்விக்குறியும் ஆச்சரியக்குறியாக மாறும்

பசுமையான புல்வெளிகளைக் கொண்ட ஒரு அழகிய கிராமம். நீல வானில் கரு நிற மேகங்கள். புத்துணர்ச்சியைக் கொடுக்கும் மண் வாசனை. சின்னஞ்சிறிய முத்துக்கள் போன்ற தூறல்கள். கண்களைக் கூசும் மின்னல் ஒளி. சற்று நேரத்தில் காதுகளுக்கு இனிமைத் தரும் ஒலியுடன் மழைத் துவங்குகிறது.

இந்நகரில் பேருடனும் புகழுடனும் வாழ்ந்துக் கொண்டிருக்கும் குடும்பத்தின் மூத்த மகன் செந்தில்குமரன். இவரது மனைவி கனிஷ்கா, நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள். வீட்டில் உள்ள அனைவரும் தூங்கச் சென்றனர். நிறைமாத கர்ப்பிணியாக இருந்த கனிஷ்காவிற்கு ஒரு கனவு வந்தது. அதில் ஒரு வேப்பமரத்தின் கீழ் செந்நிற புடவை உடுத்தியிருந்த வயதான பெண்மணி தன்னைப் பார்த்து மெல்லிய சிரிப்புடன், “உன் வாழ்வில் மங்களங்கள் நிறையும் நேரம் வந்தது", என்று கூறினார். திடீரென்று கண் விழித்த கனிஷ்கா, தாம் கண்டது அனைத்தும் கனவு என்பதை உணர்ந்தாள். அவள் தான் கண்ட கனவினை நினைவுக் கூர்ந்து, தனக்கு பெண் குழந்தை பிறக்கும் என்று உறுதியாக நம்பினாள். இடது புறம் திரும்பி கடிகாரத்தை பார்த்தாள். விடியற்காலை மூன்று மணி. பின்பு சற்று நேரம் உறங்கலாம் என்று நினைத்துப் படுத்தாள் கனிஷ்கா. சற்றே நிமிடங்களில், கனிஷ்காவிற்கு பிரசவ வலி ஏற்பட்டது. பிரசவ வலியில் கனிஷ்கா கத்தும் சத்தம் கேட்டு அருகில் இருந்த அவளது கணவன் செந்தில்குமரன், எழுந்து அவளை விரைவாக மருத்துவமனைக்கு கொண்டுச் செல்லப் புறப்பட்டான். வண்டியை விரைவாக செலுத்தி கனிஷ்காவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுக் கொண்டிருந்தான் செந்தில்குமரன். சற்று தூரம் சென்றதும், வழியில் நேற்று இரவு பெய்த கனமழையில் மரம் ஒன்று சாலையின் நடுவில் விழுந்துக் கிடந்தது. அந்த இரவு நேரத்தில் பிரசவ வலியுடன் துடித்துக் கொண்டிருக்கும் தனது மனைவியையும், குழந்தையையும் எவ்வாறு காப்பாற்றுவது என்று செய்வதறியாது

பதறினான் செந்தில்குமரன். கனிஷ்காவிற்கு பிரசவ வலி அதிகமாகியது. அவள் வலியில் துடிக்கும் சத்தம் கேட்டு அருகில் இருந்த மரத்தடியில் உறங்கிக் கொண்டிருந்தப் பெண் கண் விழித்தாள். அப்பெண் செந்தில்குமரனிடம் வந்து "இந்த நேரத்தில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஏதேனும் உதவி வேண்டுமா?" என்று வினவினாள். அவரிடம், செந்தில்குமரன் தன் மனைவி பிரசவ வலியில் துடித்துக் கொண்டிருப்பதைக் கூறினார். உடனே அப்பெண்மணி நீங்கள் அனுமதித்தால் நான் பிரசவம் பார்க்கிறேன் என்றார். செந்தில்குமரனும் அதற்குச் சம்மதித்தார். அப்பெண் கனிஷ்காவிற்கு பிரசவம் பார்த்து, அழகான பெண் குழந்தையுடன் செந்தில் குமரன் முன்பு வந்து நின்றார். செந்தில்குமரன் சந்தோஷத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் அப்பெண்ணின் காலில் விழுந்து வணங்கினார். அப்பெண் செந்தில்குமரனைப் பார்த்து "உன் வாழ்வில் அனைத்து மங்களமும் உன்னை வந்து சேரும்" என்று கூறி, குழந்தையை அவரிடம் கொடுத்துவிட்டு சென்றார். மயக்கத்தில் இருந்த கனிஷ்கா கண் விழித்தாள். மனைவி மற்றும் குழந்தையுடன் செந்தில்குமரன் வீட்டிற்கு வந்தான். கனிஷ்காவின் மாமியார் மூவரையும் ஆரத்தி எடுத்து வீட்டிற்கு வரவேற்றார்.

கனிஷ்காவின் கணவன் அவளிடம் பிரசவத்தின் போது நிகழ்ந்த அனைத்தையும் கூறினான். அதனைக் கேட்டுக் கனிஷ்கா வியந்து நின்றாள். இருப்பினும், அவள் முதல் நாள் கண்ட கனவினை இதனுடன் ஒப்பிட்டு பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். தன்னுடைய குழந்தைக்கு இறைவனின் ஆசீர்வாதம் இருப்பதாக எண்ணிப் பெரும் மகிழ்ச்சி அடைந்தாள். நாட்கள் சென்றன. குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழாத் துவங்கியது. குழந்தைக்கு அனைவருமாக சேர்ந்து வித்யரூபிணி என்று பெயர் சூட்டினர்.

ஆண்டுகள் சென்றன. குழந்தைக்கு மூன்று வயது. குழந்தை வித்யரூபிணி பள்ளிக்குச் செல்லத் தயாரானாள். நிறைந்தப் பௌர்ணமி தினத்தில் செந்தில்குமரனும் கனிஷ்காவும் வித்யரூபிணியைப் பள்ளியில் சேர்த்தனர். பள்ளியில் சேர்ந்த

வித்யரூபிணி கல்வியில் மிகுந்த ஆர்வம் உடையவளாய் இருந்தாள். வகுப்பில் முதல் மாணவியாகவும் திகழ்ந்தாள். வித்யரூபிணி பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்தவுடன் பள்ளியில் நடந்த அனைத்தையும், தன் தாய் கனிஷ்காவிடம் கூறுவாள். தன் மகளின் சுட்டித்தனமானப் பேச்சைக் கண்டு கனிஷ்கா மனம் நெகிழ்வாள்.

ஐந்தாறு ஆண்டுகள் சென்றன. அப்பொழுது வித்யரூபிணி ஆறாம் வகுப்பு பயின்று கொண்டிருந்தாள். ஒரு நாள், அவளது பள்ளியில் இலக்கிய மன்ற விழா நடைப்பெற்றது. அதில் மாணவ மாணவிகள் பலரும் கலந்துக் கொள்வதற்காக பயிற்சி செய்துக் கொண்டிருந்தனர். விழா துவங்கியது. எப்பொழுதும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும் மாணவி அன்று விடுப்பு எடுத்திருந்ததால், பள்ளியின் தலைமை ஆசிரியை வித்யரூபிணியை அழைத்து தமிழ்த்தாய் வாழ்த்து பாடலைப் பாடுமாறு கூறினார். அன்று வித்யரூபிணி முதல் முறையாக பள்ளியில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை வேறு இரு மாணவிகளுடன் இணைந்துப் பாடினாள். தனது பள்ளியில் முதல் முறையாக பாடியதை நினைத்து வித்யரூபிணி மகிழ்ச்சி அடைந்தாள். இதுவரை படிப்பில் மட்டும் முதல் மாணவியாக திகழ்ந்த வித்யரூபிணியின் இசைத் திறமை அன்று எல்லோருக்கும் தெரிந்தது. வித்யரூபிணிக்கு சிறு வயதில் இருந்தே இசையில் ஈடுபாடு அதிகமாக இருந்தது. அதிலும், வீணை வாசிப்பதில் மிகுந்த ஆவலுடன் இருந்தாள். இருப்பினும் அவளால் இசையைக் கற்று கொள்ள முடியவில்லை. இசையைக் கற்றுக்கொள்ளாமலே தனக்கு பிடித்த பாடல்கள் அனைத்தையும் பாடிக்கொண்டிருப்பாள். அவள் பாட துவங்கினால், அருகில் இருக்கும் அனைவரையும் அவள் குரலால் தன் பக்கம் ஈர்த்துவிடுவாள். அப்படிப்பட்ட ரம்மியமான குரலுக்கு சொந்தக்காரியாக இருந்தாள் வித்யரூபிணி.

மூன்று ஆண்டுகள் கழித்து வித்யரூபிணியின் பெற்றோர் அவளை வேறொரு பள்ளிக்கு மாற்ற நினைத்தனர். இது குறித்துப் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் செந்தில்குமரன் பேசியப் பொழுது, தலைமை ஆசிரியர் வித்யரூபிணியை வேறு பள்ளிக்கு

அனுப்புவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், செந்தில்குமரன் தன் முடிவில் பிடிவாதமாக இருந்ததால், தலைமை ஆசிரியர் வேறு வழியில்லாமல் ஒப்புக்கொண்டார்.

செந்தில்குமரன் தனது மகள் வித்யரூபிணியை அழைத்துக் கொண்டு புது பள்ளியில் சேர்க்கப் புறப்பட்டார். புதிதாக சேர்க்கச் சென்ற பள்ளியில் இரண்டாம் வகுப்புக்கு மேல் சேரும் மாணவ மாணவியருக்கு நுழைவுத் தேர்வின் அடிப்படையிலேயே இடம் கிடைத்தது. வித்யரூபிணியும் அவளது தந்தை செந்தில்குமரனும் தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்றனர். வித்யரூபிணியை நேர்காணல் செய்த அப்பள்ளியின் தலைமை ஆசிரியை அவளது சான்றிதழ்களை கண்டு வியந்தார். வித்யரூபிணியை எந்த வித நுழைவுத் தேர்வுமின்றி தன் பள்ளியில் சேர்த்துக் கொள்ள விரும்பினார்.

வித்யரூபிணி தனது புது பள்ளியில் ஒன்பதாம் வகுப்புச் சேர்ந்தாள். அங்கிருக்கும் மாணவ மாணவிகளும் வித்யரூபிணியிடம் நன்றாக பழகினர். பள்ளியில் சேர்ந்து இரண்டு மாதத்திற்கு பின்னர், முதல் இடைப் பருவத் தேர்வு நடைப்பெற்றது. அதிலும், வித்யரூபிணியே முதல் மாணவியாகத் திகழ்ந்தாள். ஒரு நாள் பள்ளியின் மூன்றாம் மாடியில் ஒன்பதாம் வகுப்பு மாணவிகள் சிலர் படித்துக் கொண்டிருந்தனர். அச்சமயம், பள்ளியின் தலைமை ஆசிரியை ஒலிபெருக்கி மூலம் வித்யரூபிணியை அழைத்தார். அப்பொழுது, வேகமாக வந்த வித்யரூபிணி மாடிப்படிக்கட்டில் இருந்து கீழே விழுந்தாள். கீழே விழுந்ததால், அவளுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே, வித்யரூபிணியை அவளது ஆசிரியர்கள் மருத்துவமனைக்கு கொண்டுச் சென்றனர். அப்பள்ளியின் தலைமை ஆசிரியை வித்யரூபிணியின் பெற்றோருக்கும் இதனைத் தெரிவித்தார். செந்தில்குமரனும், கனிஷ்காவும், பதற்றத்துடன் மருத்துவமனைக்கு விரைந்தனர். இரண்டு மணி நேரத்திற்கு பின்னர், வித்யரூபிணி கண் விழித்தாள். அன்று மாலை வித்யரூபிணி மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு அழைத்து வரப்பட்டாள். இரண்டு நாள் கழித்து மீண்டும்

வித்யரூபிணி பள்ளிக்குச் செல்லத் துவங்கினாள். சில மாதங்கள் சென்றன. வித்யரூபிணிக்கு மீண்டும் உடல்நிலை சரியில்லாமல் ஆனது. உடல்நிலை சரியில்லாததால் அவளால் படிப்பில் சரியாக கவனம் செலுத்த முடியவில்லை. இதனால், வகுப்பில் எப்பொழுதும் முதல் மாணவியாக திகழ்ந்த வித்யரூபிணிக்கு அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெறுவதேக் கடினமானது. வித்யரூபிணியின் ஆசிரியர்களும் அவள் மீது கொண்டிருந்த நன்மதிப்பினை இழந்தனர்.

இப்படியே, இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவள் ஒன்பதாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்று பத்தாம் வகுப்பில் சேர்ந்தாள். அப்பொழுதும், அவளது உடல்நிலை பரிபூரணமாக சீராகாததால் பள்ளியில் நடைபெற்ற தேர்வுகளில் சராசரி மதிப்பெண்களையே பெற்று வந்தாள். வித்யரூபிணியின் பெற்றோரும் அவளது நிலைமையை நினைத்து வருத்தம் அடைந்தனர். சில மாதங்களுக்கு பின்னர், பொதுத்தேர்வு வந்தது. வித்யரூபிணி தனது உடல்நிலைப் பற்றி கவலைப்படாமல் கடினமாக உழைத்தாள். தேர்வுகள் அனைத்தும் நிறைவுற்று விடுமுறைத் துவங்கியது. வித்யரூபிணியின் ஆசிரியர் அனைவரும் அவள் சாதாரண மதிப்பெண்ணுடன் தேர்ச்சிப் பெறுவாள் என்று பேசிக்கொண்டிருந்தனர்.

பொதுத்தேர்வின் முடிவுகள் வெளியானது. வித்யரூபிணியின் பெற்றோரும் அவளது தேர்வு முடிவினை பற்றி பயந்து கொண்டே இருந்தனர். வித்யரூபிணி தான் நல்ல மதிப்பெண் எடுப்போம் என்று நம்பிக்கையோடு இருந்தாள். ஆனால், இவளது உழைப்பின் மீது இவளுக்கு இருந்த நம்பிக்கை அனைவருக்கும் அலட்சியமாகவே தெரிந்தது. சரியாக பத்து மணிக்கு தேர்வு முடிவுகள் வெளியானது. வித்யரூபிணி 82% சதவீதத்துடன் தேர்ச்சிப் பெற்றாள். அவளது பெற்றோர், ஆசிரியர் அனைவரும் மகிழ்ச்சியுற்றனர்.

இதனைத் தொடர்ந்து 11-ஆம் வகுப்பில் வித்யரூபிணி கணினி அறிவியல் பிரிவில் சேர்ந்தாள். பதினொன்றாம் மற்றும் பண்ணிரெண்டாம் வகுப்பில் நடைபெற்ற அனைத்து பள்ளித்

தேர்வுகளிலும் வித்யரூபிணி 90% சதவீத மதிப்பெண்களைப் பெற்றாள். இருப்பினும், அவளது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு அவள் மீதான நம்பிக்கை அதிகரிக்கவில்லை. பண்ணிரெண்டாம் வகுப்பிற்கான பொதுத்தேர்வுத் துவங்கியது. அதிலும் கடினமாக உழைத்து தேர்வில் 95% சதவீதத்துடன் தேர்ச்சிப் பெறவேண்டும் என்று வித்யரூபிணி நினைத்தாள். நினைத்தவாறே அனைத்து தேர்வுகளுக்கும் கடினமாக உழைத்தாள். தேர்வுகள் நிறைவுற்று விடுமுறை துவங்கியது. செந்தில்குமரன் தனது மனைவி கனிஷ்காவிடம் வித்யரூபிணி தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவாளா? ஒருவேளை அவள் நிறைய மதிப்பெண் வாங்கவில்லை என்றால் அவளது மேற்படிப்பு என்னவாகும்? என்று வினவினார். இதற்கு, கனிஷ்கா வித்யரூபிணி அவளது அனைத்து தேர்விற்கும் கடின முயற்சியுடன் படித்தாள். அவள் முயற்சி அவளுக்கு நிச்சயம் கைக்கொடுக்கும் என்று கூறினார். இதனை அருகில் படுத்திருந்த வித்யரூபிணி காதில் வாங்கினாள். தன் தந்தை தன் மீது சற்றும் நம்பிக்கை இல்லாமல் இருப்பதை எண்ணி வருத்தம் கொண்டாள். இருப்பினும், தன்னுடைய மதிப்பெண் தன்பக்கம் பார்த்து நிற்கும் அனைத்து கேள்விக்குறிகளுக்கும் பதிலாக அமையும் என்று உறுதியாக நம்பினாள். தேர்வு முடிவுகள் வெளியாகின. செந்தில்குமரன் சற்று பதட்டத்துடன் இருந்தார். வித்யரூபிணி எந்த வித பதட்டமும் இன்றி காலையில் எழுந்து கோவிலுக்கு சென்று வேண்டிக் கொண்டு வீட்டிற்கு வந்தாள். தேர்வு முடிவுகள் சரியாக 11.22 மணிக்கு வெளியாகியது. வித்யரூபிணி 97% சதவீத மதிப்பெண் எடுத்து பள்ளியில் முதல் மாணவியாக வந்தாள். அன்று செந்தில்குமரன், கனிஷ்கா மற்றும் வித்யரூபிணியின் ஆசிரியர்கள் அனைவரும் அவளை நினைத்து பெருமிதம் கொண்டனர்.

வித்யரூபிணிக்கு தன் வெற்றியைக் கண்டு தன் மீதான நம்பிக்கை அதிகரித்தது. அவளது பெற்றோரும் அவளின் வெற்றியை எண்ணி மகிழ்ச்சியுற்றனர். வித்யரூபிணி பொறியியல் துறையில் கணினி அறிவியல் துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று எண்ணினாள். அவளது பெற்றோரும் அவளது முடிவிற்கு

சம்மதித்தனர். பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்விற்கு வித்யரூபிணி விண்ணப்பித்தாள். கலந்தாய்வு நடைபெறுவதற்கு இன்னும் ஒரு மாதம் இருந்தது. வீட்டில் இருந்த வித்யரூபிணி தினமும் செய்தித்தாள் வாசிப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தாள். ஒரு நாள், வித்யரூபிணி செய்தித்தாளில் நிலாக்கனி என்ற ஒரு பெண் தாய்மை என்ற தலைப்பில் எழுதியிருந்த கவிதையைப் படித்தாள். அந்தக் கவிதை வித்யரூபிணியின் மனதை வெகுவாக கவர்ந்தது. வித்யரூபிணி விளையாட்டாக அந்தக் கவிதையை வேறொருத் தாளில் எழுதி, அந்தக் கவிதையை தாம் எழுதியாகச் சொல்லி எல்லோரிடமும் காண்பித்தாள். கவிதையைப் படித்த வித்யரூபிணியின் தந்தை, மற்றும் தாய் கனிஷ்காவும் வித்யரூபிணியைப் பாராட்டினர். அனைவரும் தன்னை பாராட்டுவதை கண்டு வித்யரூபிணி, இது தான் எழுதிய கவிதை இல்லை என்று சொல்லி விடலாம் என எண்ணினாள். ஆனால், ரொம்ப நாட்களுக்கு பிறகு தன்னை அதிகமாக பாராட்டியவர்கள் முன்பு அதைச் சொல்வதற்கு வித்யரூபிணிக்கு மனம் வரவில்லை. எனவே, தாமும் இதே போல் வேறொரு கவிதையொன்றை எழுதி அதையும் எல்லோரிடமும் காண்பிக்க வேண்டும் என்று நினைத்தாள்.

வித்யரூபிணிக்கு மீண்டும் இசையின் மீதான ஆர்வம் அதிகரித்தது. அவள் இசையை முறையாக பயில வேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆனால், சில காரணங்களால் அவளால் இசையைக் கற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால், வீட்டில் இருக்கும் பொழுது, நிறைய பாடல்களை கேட்பதும் அதனைத் திரும்ப பாடுவதுமாகவே இருந்தாள். வித்யரூபிணி தான் பாடும் பாடலில் உள்ள வார்த்தைகளுக்கும் உணர்ச்சி உள்ளது என்று நம்பிக்கை கொண்டிருந்தாள். எனவே, அவள் எதிர்மறையான வார்த்தைகள், அல்லது சோக நிலை பாடல்களை பெரிதாக பாடமாட்டாள். இருப்பினும், சில சோக நிலை பாடல்களின் இசை அவளது மனதைக் கவர்ந்தது. அப்படிப்பட்ட பாடல்களை அவளால் பாடாமலும் இருக்க முடியவில்லை, முழுமனதுடனும் பாட முடியவில்லை.

எனவே, தனக்கு பிடித்த இசையை உடைய பாடல்களின் வரிகளை தனக்கேற்ப மாற்றி பாடலாம் என வித்யரூபிணி எண்ணினாள். இவ்வாறாகவே அவளது விடுமுறை காலங்கள் முடிந்து, செப்டம்பர் மாதம் ஆறாம் தேதி கல்லூரித் துவங்கியது.

கல்லூரியின் முதல் நாளன்று வித்யரூபிணி மிக ஆர்வத்துடனும் பலவித எதிர்பார்ப்புகளுடனும் கிளம்பினாள். அன்று முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான திறப்பு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. திறப்பு விழாவில் கல்லூரியின் பாடல் ஒலிக்கசெய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து கல்லூரியின் செயலாளர், முதல்வர், துறைத் தலைவர்கள், இணைப் பேராசிரியர்கள் பலரும் பேசத் துவங்கினர். இறுதியாக தேசிய கீதத்துடன் விழா நிறைவுற்றது. திறப்பு விழா நிறைவுற்றதும், அனைத்து மாணவர்களும் அவர்களது வகுப்புக்குச் சென்றனர். வித்யரூபிணிக்கு தனது கல்லூரியின் முதல் நாள் மிகவும் பிடித்திருந்தது. மேலும், தான் கணினி அறிவியல் துறையைத் தேர்ந்தெடுத்ததை எண்ணிப் பெருமிதம் கொண்டாள்.

கல்லூரியின் முதல் நாள் வகுப்பு முடிந்ததும் வீட்டிற்கு வந்த வித்யரூபிணி தன் தாயிடம் தனது சந்தோஷத்தை பகிர்ந்துக் கொண்டாள். ஒவ்வொரு நாளும் கல்லூரிக்கு மிக ஆர்வத்துடன் வித்யரூபிணி சென்று வந்தாள். அனைத்து பாடங்களையும் கவனமாக கற்றுக் கொள்ளவேண்டும் என்று எண்ணினாள். அது போலவே அனைத்து பாடங்களையும் நன்றாகக் கற்றுக் கொண்டாள்.

இரண்டு மாதங்கள் சென்றன. இன்னும் சரியாக இரண்டு நாட்களில் தீபாவளி பண்டிகை வரவுள்ளது. கல்லூரியின் முதல்வருக்கு தெரிந்த குழந்தைகள் ஆசிரமத்தில் இருந்து அவருக்கு ஒரு தொலைப்பேசி அழைப்பு வந்தது. அந்த ஆசிரமத்தின் உரிமையாளர், கல்லூரி முதல்வரிடம் அவர் கல்லூரி மாணவர்களை தீபாவளி தினத்தன்று தனது ஆசிரமத்திற்கு அழைத்து வந்து தீபாவளி பண்டிகையை இங்கு கொண்டாடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு கல்லூரியின் முதல்வரும் ஒப்புக்கொண்டார். இது குறித்த சுற்றறிக்கை அனைத்து துறைகளுக்கும் வந்தது.

மாணவர்கள் அனைவரும் சந்தோஷத்துடன் தீபாவளி பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகினர்.

தீபாவளி நாளும் வந்தது. அனைத்து மாணவர்களும் கல்லூரிக்கு வந்து, அங்கிருந்து குழந்தைகள் ஆசிரமத்திற்கு வந்தனர். வித்யரூபிணி ஆசிரமத்திற்கு வந்ததும் அங்கிருக்கும் குழந்தைகளை பார்த்து மகிழ்ந்தாள். அந்த ஆசிரமத்தின் உரிமையாளரும் கல்லூரி மாணவர்கள் வந்ததை எண்ணி சந்தோஷம் கொண்டார். மாணவர்கள், ஆசிரமத்தில் இருக்கும் குழந்தைகள், ஆசிரியர்கள், அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து தீபாவளி பண்டிகையைக் கொண்டாடத் துவங்கினர். சற்று நேரம் சென்றதும், அந்த ஆசிரமத்தின் உரிமையாளர், மாணவர்களைப் பார்த்து, இந்த கொண்டாட்டத்தை மேலும் அதிகரிக்க யாரேனும் ஒருவர் குழந்தைகளுக்கு ஊக்கம் தரும் வகையில் ஒரு பாடலைப் பாடுமாறு கேட்டுக் கொண்டார். இதனைக் கேட்ட வித்யரூபிணி, அவரிடம் நான் பாடலாமா என்று கேட்டாள். ஆசிரமத்தின் உரிமையாளர் தாராளமாக பாடலாம் என்று கூறவே வித்யரூபிணி பாடத் துவங்கினாள்.

இயற்கை வானிலே பறக்க நினைக்கிறேன்
கனவுகள் உயிர்பெற நாளும் நினைக்கிறேன்
எந்தன் நெஞ்சின் ஆசைகள் நிறைவேற வேண்டுமே
எந்தன் ஆசை நிறைவேற தெய்வமும் துணையாகும் -(இயற்கை)

(1)

தோற்றம் தன்னை வைத்துத் திறமையை எண்ணினால்
ஊறுகின்ற எறும்பும் யானையை வென்றிடும்
வாழ்வினில் வெற்றிப் பெற்றிடத் தோல்வியே துணையாகும்
வெற்றியின் கதவைத் திறந்திடும் சாவியும் உன்னிடமே
என்றும் எழுச்சி ஏற்றம் உந்தன் வாழ்வில் வந்திடும்

இருந்தும் நீயும் என்றும் நல்பணிவை கொண்டிரு

இதுவே என்றும் என் வெற்றி ரகசியம் -(இயற்கை)

(2)

காலங்கள் என்றும் வாய்ப்பினை நல்கிடும்

வாய்ப்புகள் யாவும் வலிமையைத் தந்திடும்

வெற்றி என்றும் உந்தன் கையிலே

உயிரே என் உறவே

தோல்விக் கண்டுத் துவண்டு போவதில்

எந்த பயனும் இல்லை

கண்கள் காணும் கனவு நிறைவேறும் கண்மணி - (2)

ஒருநாள் உனைக்கண்டு இந்த உலகம் வியக்குமே -(இயற்கை)

இந்தப் பாடலை வித்யரூபிணி பாடி முடித்ததும் அங்கிருந்த ஆசிரியர்கள், நண்பர்கள், குழந்தைகள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கைத்தட்டி வித்யரூபிணியைப் பாராட்டினர்.

இதனை அடுத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மதிய உணவிற்குப் பிறகு ஆசிரமத்தில் இருந்து வீட்டிற்குப் புறப்பட்டனர். வீட்டிற்குத் திரும்பியதும் வித்யரூபிணி அந்த ஆசிரமத்தில் நடந்ததை நினைவுக் கூர்ந்து மகிழ்ந்தாள். மேலும், இது போன்று பல பாடல்களை எழுதி அதனை ஒரு தொகுப்பாக வெளியிட வேண்டும் என்று வித்யரூபிணி எண்ணினாள். அவ்வாறாகவேப் பல தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துப் பாடல்கள் எழுத துவங்கினாள். ஓரிரு மாதங்களுக்குள் இருபதுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதினாள். அவ்வப்போது அவ்வரிகளை சினிமா பாடல்களின் இசையில் பாடவும் துவங்கினாள். இந்நிலையில் அவளது முதலாம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத் தேர்வும் நெருங்கியது. வித்யரூபிணி அனைத்து

தேர்விற்கும் கவனத்துடன் படித்து அனைத்து தேர்வுகளையும் நன்றாக எழுதினாள்.

முதலாம் ஆண்டு தேர்வு முடிந்து விடுமுறை வந்தது. கல்லூரியின் விடுமுறையின் போது தலைச்சிறந்த ஒரு நாளிதழில் சிறந்த கவிதைத் தொகுப்பிற்கானப் போட்டி நடைபெற்றது. அதில் வெற்றி பெறுபவருக்கு அந்த ஆண்டின் சிறந்த எழுத்தாளர் என்ற பட்டத்துடன் கவிமாமணி விருதும் தருவதாக அறிவிக்கப்பட்டது. இதனை அறிந்த வித்யரூபிணி தான் எழுதியக் கவிதைகளை ஒரு தொகுப்பாகத் திரட்டி அதனை மௌனத்தின் மொழி என்ற தலைப்பில் வெளியிட்டு அந்நாளிதழ் நிறுவனத்திற்கு அனுப்பினாள். அதில் தான் வெற்றிப் பெறுவோம் என்றும் கவிமாமணி விருது தமக்கு கிடைக்கும் என்றும் அவள் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தாள்.

விடுமுறை முடிந்து மீண்டும் கல்லூரித் துவங்கியது. இரண்டாம் ஆண்டில் இருந்தப் பாடங்கள் பெரும்பாலும் மென்பொருள் சார்ந்தவையாக இருந்தது. இதனால் வித்யரூபிணிக்கு ஆர்வம் பன்மடங்காகியது. ஒவ்வொரு நாளும் மென்பொருள் தயாரிப்பதற்கு ஒவ்வொரு யுக்தியையும் அவள் மிகுந்த ஆர்வத்துடன் கற்றுக்கொண்டாள். மென்பொருள் பற்றி ஓரளவிற்கு தெரிந்து கொண்ட பிறகு, வித்யரூபிணிக்கு தாமும் ஏதேனும் ஒரு மென்பொருளை தயாரிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. ஒரு வாரத்திற்கு பிறகு சிறந்த கவிதை தொகுப்பு போட்டியின் வெற்றியாளரை அந்நிறுவனம் தேர்ந்தெடுத்து அவர்களது நாளிதழில் வெளியிட்டது. சில காரணங்களால் வித்யரூபிணி அப்போட்டியில் வெற்றிப் பெறவில்லை. மிகுந்த நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் இருந்த வித்யரூபிணி சற்று மனம் தளர்ந்தாள்.

இருப்பினும் இந்த மனத்தளர்வு அவளது முயற்சிக்குத் தடையாகவில்லை. வித்யரூபிணி தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தாள். அவள் ஏதேனும் ஒரு மென்பொருளை தாம் தயாரிக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தாள். மேலும், தான் தயாரிக்கும் மென்பொருளால்

எல்லோருக்கும் அதிக நன்மை இருக்க வேண்டும் என்றும் விரும்பினாள். இது பற்றி ஒவ்வொரு நாளும் வித்யரூபிணி தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள். வித்யரூபிணிக்கு தனது வீட்டின் தொலைபேசி மற்றும் மின்சாரத்திற்கான கட்டணத்தை இணையத்தின் வாயிலாக செலுத்துவது வழக்கம். ஒரு சமயம் வித்யரூபிணி இவ்விரண்டு கட்டணத்தையும் செலுத்துவதற்கு மறந்து விட்டாள். கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாளின் பொழுது தான் அது அவளுக்கு நினைவுக்கு வந்தது. உடனே வித்யரூபிணி தனது மடிக்கணினி மூலம் விரைவாகக் கட்டணம் செலுத்த துவங்கினாள். ஆனால், அவள் மின்கட்டணத்தை மட்டுமே செலுத்த முடிந்தது. தொலைபேசி கட்டணத்தை செலுத்த முடியவில்லை. பின்பு, தொலைபேசிக் கட்டணத்தை நேரில் சென்று வெகு நேரத்திற்கு பிறகே செலுத்தினாள். இதனால், வித்யரூபிணி அன்று கல்லூரிக்கும் தாமதமாகவே சென்றாள்.

கல்லூரியில் வித்யரூபிணிக்கு ஒரு இணையதளம் எவ்வாறு உருவாகிறது என்பதைப் பற்றி பேராசிரியர் கூறிக்கொண்டிருந்தார். இதனை கேட்ட பிறகு வித்யரூபிணி இணையதளம் உருவாக்குவதைப் பற்றி மேலும் கற்றுக்கொண்டாள். இதற்கிடையில், அவள் அன்று காலையில் சந்தித்த இணைய தொழில்நுட்ப கோளாறு பற்றியும் யோசித்தாள். உடனே, வித்யரூபிணி மின்கட்டணம் மற்றும் தொலைபேசிக் கட்டணம் செலுத்தும் இணையதளம் ஒன்றாக இருந்திருந்தால் தாம் கட்டணத்தை வெகுவாக செலுத்தி இருக்க முடியும் என்று நினைத்தாள். எனவே, அவள் அனைத்து வித கட்டணங்களையும் செலுத்துவதற்கான இணையதளம் ஒன்றை நாம் உருவாக்க வேண்டும் என்று எண்ணினாள்.

வித்யரூபிணி இணையதளம் உருவாக்குவதுப் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்தாள். தனது கல்லூரிப் படிப்பு முடியும் முன்பாகவே இதனைச் செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணினாள். இந்நிலையில் அவளது கல்லூரியில் சிறிய அளவிலான இணையதளம் உருவாக்கும் போட்டி நடைபெற உள்ளது

என்ற சுற்றறிக்கையை பேராசிரியர் படித்து காண்பித்தார். இதில் கலந்து கொண்டு வெற்றி பெற வேண்டும் என்று வித்யரூபிணி முடிவெடுத்தாள். போட்டிக்கான நாட்கள் குறைவாக இருந்ததால், சிறிய அளவிலான இணையதளம் ஒன்றை உருவாக்கலாம் என்று எண்ணினாள்.

இதன்படி, வித்யரூபிணி மற்றும் உடன் பயிலும் மாணவிகள் மூவரும் இணைந்து தம்முடையக் கல்லூரியின் இணையதளத்தை மேலும் சிறப்பாக செய்து புதியதொரு இணையதளம் கொண்டு வரலாம் என்று முடிவு செய்தனர். அவ்வாறே செய்வதற்கு ஆயத்தமாகினர். வித்யரூபிணி இணையதளத்தின் வடிவமைப்பை தோராயமாக காகிதத்தில் வரைந்து தனது அணியில் உள்ள அனைவரிடமும் காண்பித்து அவர்கள் உருவாக்கவிருக்கும் இணையதளத்தின் அமைப்பை தெளிவுப்படுத்தினாள். பின்பு, இருவர் இருவராக பிரிந்து இணையதளத்தின் வடிவமைப்பை ஒருவரும் செயல் பாட்டினை வேறொரு வருமாக செய்யத் துவங்கினர்.

வித்யரூபிணி மற்றும் கார்த்திகா என்ற மாணவியும் இணையத்தின் வடிவமைப்பை செய்து கொண்டிருந்தனர். மற்ற இருவரும் இணையத்தின் செயல்பாட்டினை செய்வதற்கு ஆயத்தமாகினர். நால்வரும் இணைந்து புதிய இணையதளத்தை உருவாக்கினர். இவர்களது முயற்சியை அனைத்து ஆசிரியர்களும் பாராட்டினர். மறுநாள், அனைத்து மாணவர்களும் அவர்கள் செய்திருக்கும் மென்பொருள் மற்றும் பல்வேறு திட்டங்களை காண்பித்தனர். இறுதியாக அந்தந்த துறை தலைவர்கள் ஒவ்வொரு துறையிலும் வெற்றியாளரை அறிவித்தனர். இந்த முறையும் வித்யரூபிணி வெற்றிபெறவில்லை. அவளது முயற்சி யாவும் அனைவருக்கும் விழலுக்கு இறைத்த நீர் போலவே தெரிந்தது.

இருப்பினும் வித்யரூபிணி சற்றும் மனம் தளரவில்லை. அவள் தாமாக ஒரு இணையதளம் உருவாக்க கற்றுக் கொண்டதை எண்ணிப் பெருமிதம் கொண்டாள். நாட்கள் சென்றன. இரண்டாம் ஆண்டிற்கான பல்கலைக்கழக தேர்வு வந்தது. இம்முறையும் வித்யரூபிணி தேர்வுகளுக்கு நன்றாக படித்து அனைத்து

தேர்வுகளையும் நன்றாக எழுதினாள். தேர்வுகள் முடிந்து விடுமுறை காலம் வந்தது. இந்த விடுமுறையில் வித்யரூபிணி மென்பொருள் பயிற்சி நிறுவனம் ஒன்றில் சேர்ந்து கணினித் தொடர்புடைய பல தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொள்ளத் துவங்கினாள் . இதனால், வித்யரூபிணிக்கு கணினி மீதான ஆர்வம் மேலும் அதிகமாகியது. கல்லூரி விடுமுறை முடிந்து, கல்லூரித் துவங்கியது. கல்லூரித் துவங்கிய பின் தினமும் கல்லூரி முடிந்து மாலை நேரத்தில் மென்பொருள் பயிற்சி நிறுவனத்திற்குச் சென்று கொண்டிருந்தாள். இவ்வாறாக மூன்றாம் ஆண்டு படிக்கும் பொழுது, அவளது கனவு இணையதளத்தை உருவாக்க ஆயத்தமாகினாள்.

மூன்றாம் ஆண்டு படிக்கும் பொழுது ஒரு நாள் பேராசிரியர் ஒருவர் இணையதளம் எவ்வாறு இயங்குகிறது என்றும், அதன் வியாபார உத்திகள் பற்றியும் எடுத்துரைத்தார். இதனை வித்யரூபிணி கூர்ந்து கவனித்து மேலும் அதனைப் பற்றி இணையத்தில் ஆய்வு செய்து மேலும் பல விஷயங்களை அறிந்துகொண்டாள். இரண்டு மாதங்கள் கழித்து வித்யரூபிணி மென்பொருள் பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்த படிப்பை முழுவதுமாக முடித்து, அதற்கான சான்றிதழையும் பெற்றுக்கொண்டாள். பின்பு, அவள் உருவாக்கவிருக்கும் இணையதளத்தின் வடிவமைப்பைத் தெளிவாக வரைந்து முடித்தாள். அதில் தொலைபேசி கட்டணம், மின்கட்டணம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம், பேருந்து மற்றும் ரயில் பிரயாணங்களுக்கான கட்டணம் போன்ற முக்கிய கட்டணச் சேவைகளைக் குறிப்பிட்டிருந்தாள்.

ஒரு நாள் கல்லூரியில் இருவேறு துறை மாணவர்களுக்கிடையே "சமூக ஊடங்கங்களால் விளைவது நன்மையா தீமையா" என்ற விவாதம் நடைப்பெற்றது. இந்த விவாதத்தை வித்யரூபிணி தொகுத்து வழங்கினாள். இந்த விவாதத்திற்கு சிறப்பு விருந்தினராக ஒரு பெரிய மென்பொருள் நிறுவனத்தின் இணை இயக்குனரான திரு.அன்புமணிதாசன் வந்திருந்தார். மாணவர்கள் இரு அணிகளாக பிரிந்து சமூக ஊடகங்களால் நன்மை என்று ஒரு அணியும், சமூக ஊடகங்களால்

தீமை என்று மற்றொரு அணியாக பிரிந்து அவரவர் கருத்துகளைக் கூறி கொண்டு வந்தனர். விவாதம் முடிந்த பிறகு, சிறப்பு விருந்தினராக வந்திருந்த அன்புமணிதாசன் அவர்கள், இந்த விவாதத்தை தொகுத்து வழங்கிய வித்யரூபிணியிடம் இந்த விவாதத்தைப் பற்றிய கருத்தைக் கேட்டார்.

வித்யரூபிணி "இன்றைய சூழ்நிலையில் சமூக ஊடகத்தினால் பல்வேறு நன்மைகள் நடந்துக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, குழந்தைகள் யாரேனும் காணாமல் போகியிருந்தால், அல்லது மாணவர்கள் அவர்களது சான்றிதழ்களை தொலைத்திருந்தாலோ, சமூக ஊடகங்கள் மூலம் இவற்றை நாம் மீட்டெடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. ஆனால், சமூக ஊடகங்களால், பல்வேறு விதத்தில் பல்வேறு தீமைகளும் நடந்துக் கொண்டுதான் வருகிறது. எனவே, என்னைப் பொறுத்தவரை உலகில் இருக்கும் அனைத்து பொருள்களாலும், நவீன கண்டுபிடிப்புகளிலும் நன்மை மற்றும் தீமை இரண்டுமே இருக்கும். ஒவ்வொரு தொழில்நுட்பத்தையும் நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே, அது நன்மையா அல்லது தீமையா என்ற முடிவிற்கு நாம் வர முடியும். உதாரணத்திற்கு, ஒரு பூந்தோட்டத்தில் இருக்கும் ரோஜா பூ நம் மனதில் மகிழ்ச்சியைக் கொண்டு வரும். ஆனால், அதே ரோஜா பூவில் இருக்கும் முள்ளின் மீது நம் விரல் தவறுதலாக பட்டால் கூட அது நம் கையை பதம் பார்த்துவிடும், என்று கூறி முடித்தாள்".

இதனைக் கேட்ட திரு.அன்புமணிதாசன் அவர்கள் வித்யரூபிணியை பாராட்டினார். மேலும், அவர் வித்யரூபிணியின் பதிலை கேட்டும், இந்நிகழ்சியைத் தொகுத்து வழங்கியதை கண்டும் தான் பெரிதும் வியந்துள்ளதாகவும் கூறினார். எனவே, வித்யரூபிணிக்கு தமது நிறுவனத்தில் வேலை வாய்ப்புத் தருவதாகவும் அவர் வாக்களித்தார்.

ஆனால், வித்யரூபிணி சம்மதிப்பதற்கு மறுத்தாள். திரு.அன்புமணிதாசன் அவர்கள், வித்யரூபிணியின் மறுப்புக்கு

காரணம் கேட்டார். இதற்கு, வித்யரூபிணி எனக்கு ஒரு மென்பொருள் நிறுவனம் அல்லது மென்பொருள் பயிற்சி நிறுவனம் நடத்த ஆசை என்றும், மேலும் அவளது குடும்பம் அவளுக்கு மிகவும் முக்கியம் என்பதையும் தெளிவாக கூறினார். இதனை கேட்ட பின்னரும், வித்யரூபிணியின் ஆசிரியைகளும் நண்பர்களும், இந்த வாய்ப்பை ஏற்றுக் கொள்ளுமாறு வித்யரூபிணியை வற்புறுத்தினர். இதனால், வித்யரூபிணி திரு.அன்புமணிதாசன் அவர்களிடம் தனக்கு இந்த வாய்ப்பினை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லை. ஆதலால், இந்த நல்வாய்ப்பினை இந்த விவாதத்தில் பங்குகொண்டு சிறப்பாக பேசிய வேறொரு மாணவருக்கு நல்குமாறுக் கேட்டு கொண்டாள். இதற்கு சம்மதித்த திரு.அன்புமணிதாசன் அவர்கள், சஞ்சித் என்ற மாணவருக்கு இந்த வாய்ப்பினை கொடுத்தார். ஆனால், தனக்கு கிடைத்த நல்வாய்ப்பினை அவள் இழந்து விட்டதாக எல்லோரும் வித்யரூபிணியிடம் கூறினர். இதனைக் கேட்ட பிறகும், வித்யரூபிணி அவளது முடிவில் தெளிவாக இருந்தாள்.

இன்னும் ஒருவாரத்தில் மூன்றாம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத் தேர்வு நடைபெற இருந்தது. மாணவர்கள் அனைவரும் அவர்களது தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினர். வித்யரூபிணி தேர்வுக்கு நன்றாக தயாராகி ஒவ்வொருத் தேர்வையும் நன்றாக எழுதினாள். ஆனால், கடைசி தேர்வின் வினாத்தாள் சற்றுக் கடினமாக இருந்தது. வித்யரூபிணி அந்தத் தேர்வினை நன்றாக எழுதவில்லை. இதனால், தேர்வு முடிவினை எண்ணி வித்யரூபிணி கவலைக் கொண்டிருந்தாள். தேர்வு முடிந்து விடுமுறைத் துவங்கியது. வித்யரூபிணி எப்பொழுதும் இருப்பது போல் இல்லாமல் சற்றுத் தளர்வாக இருப்பதை அவளது தாய் கனிஷ்கா கவனித்தாள். இது குறித்து வித்யரூபிணியிடம் கனிஷ்கா கேட்டாள். வித்யரூபிணியும் தன் தாயிடம் தான் ஒரு தேர்வினை சரியாக எழுதவில்லை என்று கூறினாள். அதற்கு கனிஷ்கா கவலைப்படாமல் இரு, தேர்வு முடிவுகள் வந்தபின், பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினார்.

விடுமுறை காலம் முடிந்து கல்லூரித் துவங்கியது. எப்பொழுதும் போல் இல்லாமல் வித்யரூபிணி இம்முறை சற்று சோகமாவே கல்லூரிக்குச் சென்றாள். தனது தேர்வு முடிவினை பற்றிய பயம் அவளது மனதில் எப்பொழுதும் இருந்துக் கொண்டே இருந்தது. நான்காம் ஆண்டின் முதல் நாளன்று ஆசிரியர் மாணவர்களிடம் அவர்கள் இந்த ஆண்டு செய்ய வேண்டிய ப்ராஜெக்ட் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். இதனைக் கேட்ட பின் வித்யரூபிணி தனது தேர்வு முடிவினை பற்றிய பயத்தினை விட்டு விட்டு ப்ரொஜெக்ட்டில் கவனம் செலுத்த வேண்டும் என்று எண்ணினாள். இருப்பினும், தேர்வு முடிவுகள் வரும் வரை அவளால் எதிலும் முழுமையாக கவனம் செலுத்த முடியவில்லை.

இப்படியே கல்லூரி துவங்கி ஒரு வாரம் முழுவதும் சென்றது. ஒரு வாரத்திற்கு பிறகு, தேர்வு முடிவுகள் வந்தது. வித்யரூபிணி அவளது பயத்திற்கு மாறாக அனைத்து தேர்வுகளிலும் நல்ல மதிப்பெண் எடுத்திருந்தாள். இதனால் அவள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள். தான் அனைத்து தேர்வுகளிலும் நல்ல மதிப்பெண் எடுத்திருப்பதாக தன் தாயிடம் கூறினாள். வித்யரூபிணியின் தாயும் மகிழ்ந்து அவளைப் பாராட்டினார் .

இதன் பிறகு தான் உருவாக்க நினைத்த இணையதளத்தையே தனது கல்லூரி ப்ராஜெக்டாக செய்யலாம் என்று எண்ணினாள் வித்யரூபிணி. இது குறித்து தனது ப்ராஜெக்ட் வழிகாட்டியிடம் விவரமாகக் கூறினாள் வித்யரூபிணி. அவரும் அந்த இணையதளம் ப்ராஜெக்ட் செய்வதற்கு ஒப்புக்கொண்டார். வித்யரூபிணி அவள் முன்பு வரைந்திருந்த வடிவமைப்பை எடுத்துப் பார்த்தாள். வடிவமைப்பை பார்த்து விட்டு தனது ப்ரொஜெக்ட்டை ஒவ்வொரு பகுதியாக பிரிக்கத் துவங்கினாள். ஒரு மென்பொருள் தயாரிப்பதற்குத் தேவைப்படும் பகுதிகளான, தேவை பகுப்பாய்வு, வடிவமைப்பு, முன்னேற்றம், சோதனை செய்தல், மற்றும் செயல்படுத்துதல் என்று ஒவ்வொரு பகுதியாய் பிரித்தாள். தனது ப்ரொஜெக்ட்டிற்குத் தேவையானவற்றை பட்டியலிடத் துவங்கினாள்.

தேவைப் பகுப்பாய்வு முடிந்தப் பிறகு, அதனைத் தனி ஆவணமாக தயாரித்து, அதனை அவள் முன்பு வைத்திருந்த வடிவமைப்புடன் ஒப்பிட்டு சரிப்பார்த்தாள். வடிவமைப்பு மற்றும், தேவைப் பகுப்பாய்வு ஆவணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தப் பின்னர் இணையத்தளத்தை உருவாக்கத் துவங்கினாள். முதலில் இணையதளத்தின் முகப்பு பக்கத்தை உருவாக்கினாள். இணையதளத்தின் முகப்பு பக்கத்தில் வாடிக்கையாளர்கள் பதிவு செய்வதற்கும், பதிவு செய்த பின்னர் தங்கள் பக்கத்திற்கு செல்வதற்குமான இணைப்புகளும், கட்டண சேவைத் தொடர்பான படங்களும், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகளும் வைத்து வடிவமைத்தாள். பின்பு, வாடிக்கையாளரின் பக்கத்தை வடிவமைக்கத் துவங்கினாள்.

ஒவ்வொரு பகுதிகளையும் முடித்த பின்பு, தனது ப்ராஜெக்ட் வழிகாட்டியிடம் ஒப்புதல் பெற்றுக் கொண்டு அடுத்தப் பகுதியை தொடர்ந்தாள். இவ்வாறாக மூன்று மாதங்களில் அவளது கனவு இணையதளத்தை முழுவதுமாக செய்து முடித்தாள். இணையதளம் ப்ரொஜெக்ட்டை செய்து முடித்த பின்னர், செயல்முறை தேர்வுக்கு தேவையான ஆவணங்களையும் தயாரித்து வைத்து கொண்டாள். இன்னும் ஒரு வாரத்தில் செயல்முறை தேர்வு நடைப்பெறவிருந்தது. மாணவர்கள் அனைவரும் தங்கள் செயல்முறைத் தேர்வுக்கு ஆயத்தமாகி கொண்டிருந்தனர். செயல்முறைத் தேர்வு நாளும் வந்தது. செயல்முறை தேர்வுக்கு வேறொரு கல்லூரியில் துறைத் தலைவராக பணிபுரிபவர் மதிப்பீட்டாளராக வந்திருந்தார். ஒவ்வொரு மாணவர்களாக தங்களது ப்ராஜெக்டை விவரிக்கத் துவங்கினர். அடுத்ததாக வித்யரூபிணி அவளது ப்ராஜெக்ட்டை விவரிக்க துவங்கினாள். அவள் விவரித்து முடித்த பின்னர், மதிப்பீட்டாளர் அவளிடம் பல கேள்விகளை முன் வைத்தார். வித்யரூபிணியும் மதிப்பீட்டாளர் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் கூறினாள். இருப்பினும், மதிப்பீட்டாளர் வித்யரூபிணியின் ப்ரொஜெக்ட்டில் திருப்தி பெறவில்லை. எனவே, அவர் வித்யரூபிணியிடம் இந்த ப்ராஜெக்ட்டை உண்மையாகச் செய்துக் கொடுத்தது யார் என்று

வினவினார். அதற்கு வித்யரூபிணி இந்த ப்ராஜெக்டை முழுவதுமாக நான்தான் செய்தேன் என்று கூறினாள். இதனை மதிப்பீட்டாளர் நம்புவதற்கு மறுத்தார். இந்த ப்ராஜெக்டை தான் செய்யவில்லை என்று ஒப்புக்கொள்ளுமாறு வலியுறுத்தினார். வித்யரூபிணி இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. பின்பு வித்யரூபிணியின் ப்ராஜெக்ட் வழிகாட்டி மதிப்பீட்டாளரிடம் அவளது ப்ராஜெக்ட்டைப் பற்றி எடுத்துரைக்கும் போது மதிப்பீட்டாளர் வேறு வழி இல்லாமல் ஒப்புக்கொண்டார்.

செயல் முறைத் தேர்வு முடிந்து ஒரு வார விடுமுறைக்கு பின்னர், நான்காம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத் தேர்வு துவங்கியது. தனது பட்டபடிப்பின் இறுதி வருடத்திற்கான தேர்வை நன்றாக எழுத வேண்டும் என்று எண்ணி அனைத்து தேர்வுக்கும் வித்யரூபிணி நன்றாக படித்து, தேர்வுகளை நன்றாக எழுதினாள். தேர்வுகள் முடிந்து கல்லூரியின் இறுதிநாள் விழாத் துவங்கியது. இந்த விழாவில், ஒவ்வொரு மாணவரும் அவர்களது கல்லூரி அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். வித்யரூபிணியும் அவளது கல்லூரி வாழ்க்கையில் அவள் கற்றுக் கொண்ட அனுபவங்கள், மகிழ்ந்திருந்த நாட்கள், என அவளது அனுபவத்தை பகிர்ந்துக் கொண்டாள். இறுதியாக ஒவ்வொரு மாணவர்களுக்கும், துறைத் தலைவர் ஒவ்வொரு விருதினை கொடுத்து கொண்டு வந்தார். வித்யரூபிணிக்கு அந்த ஆண்டின் சிறந்த மாணவி என்ற விருதினை துறைத் தலைவர் வழங்கினார்.

கல்லூரி நாட்கள் முடிந்தது. வித்யரூபிணி அவளது விருப்பத்தின் படி ஒரு மென்பொருள் நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்தாள். இது தொடர்பாக அவள் இணையத்தில் பல ஆய்வுகளை செய்தாள். இருப்பினும் அவளால் தெளிவாக ஒரு முடிவெடுக்க முடியவில்லை. ஒரு வியாபாரத்தின் வளர்ச்சிக்கு விளம்பரங்களே முக்கியம் என்பதை வித்யரூபிணி உணர்ந்தாள். ஒரு மென்பொருள் நிறுவனம் ஆரம்பிப்பதற்கு பல்வேறு முயற்சிகளை அவள் எடுத்தாள். இருப்பினும், அந்த முயற்சிகள் யாவும் அவளுக்கு பலன் கொடுக்கவில்லை. மேலும், அவளது உறவினர்கள் அவளைப்

பற்றித் தாழ்வாகவும் எண்ணத் துவங்கினர். இதனை அவர்கள் யாரும் வெளிப்படையாக வித்யரூபிணியிடம் கூறவில்லை என்றாலும், அவ்வப்போது அவர்கள் பேசும் விதத்தில் இருந்து வித்யரூபிணி இதனை உணர்ந்தாள். தம்மைப் பற்றி அனைவரும் கொண்டிருக்கும் தாழ்வான எண்ணத்தை எப்படியாவது மாற்ற வேண்டும் என்று வித்யரூபிணி நினைத்தாள். மேலும், தனக்கென்று இது வரை பெரிய அளவில் எந்த வித அங்கீகாரமும் கிடைக்கவில்லை. அவ்வாறு ஏதேனும் ஒரு பெரிய வித அங்கீகாரம் தனக்கு கிடைத்தால், அனைவரும் தன் மீது கொண்டுள்ள தாழ்வான எண்ணத்தை நிச்சயமாக மாற்ற முடியும் என்று வித்யரூபிணி உறுதியாக நம்பினாள்.

அத்தகைய அங்கீகாரம் தமக்கு கிடைப்பதற்கு தாம் ஏதேனும் செய்ய வேண்டும் என்று அவள் நினைத்து கொண்டிருந்த நேரத்தில், அந்த ஆண்டிற்கான பத்மா விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. இதனை அறிந்த வித்யரூபிணி, தாமும் பத்மஸ்ரீ விருதினை வாங்க வேண்டும் என்று எண்ணினாள். எனவே, பத்ம விருதுகள் யாருக்கெல்லாம் கொடுக்கப்படும் என்பதை அதன் இணையத்தளத்தினைப் பார்த்து அறிந்து கொண்டாள். பத்மஸ்ரீ விருது இலக்கியத் துறையில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது என்பதை அறிந்த வித்யரூபிணி, தனக்கும் கவிதை எழுதும் திறமை உள்ளதை மீண்டும் நினைவுக் கூர்ந்தாள்.

தம்முடைய கனவு ஒரு மென்பொருள் நிறுவனம் நடத்த வேண்டும் என்பதாக இருந்தாலும், தற்சமயம் அனைவரும் தன் மீது கொண்டிருக்கும் தாழ்வான எண்ணத்தை மாற்ற வேண்டும் என்பதே வித்யரூபிணியின் நோக்கமாக இருந்தது. எனவே அவள் தாம் ஒரு கவிதைத் தொகுப்பினை வெளியிட வேண்டும் என்றும், மேலும் அந்தக் கவிதை தொகுப்பிற்கு பத்மஸ்ரீ விருது பெற வேண்டும் என்றும் உறுதியாக நினைத்தாள். ஆனால், இதனைப் பற்றி வித்யரூபிணி யாரிடமும், எதுவும் கூறவில்லை. இறை நம்பிக்கை சற்று அதிகமாக கொண்டிருந்த வித்யரூபிணி அன்று மாலை தமது வீட்டிற்கு அருகில் இருக்கும் கோவிலிற்குச் சென்று அம்மனை

வணங்கி விட்டு இதனை ஆரம்பிக்கலாம் என்று எண்ணினாள். அவ்வாறே அன்று மாலை வித்யரூபிணி அவள் பெற்றோரிடம் கூறிவிட்டு அருகில் இருக்கும் கோவிலிற்குச் சென்றாள். அம்மன் சந்நிதியில் வித்யரூபிணி நின்று வேண்டிக் கொண்டிருந்தாள். அப்பொழுது, அவள் எதிரில் நின்ற ஒரு வயதான பெண்மணி, வித்யரூபிணி முகத்தில் இருக்கும் ஏக்கத்தை வைத்து, அவள் ஏதோ ஒரு சோகத்தில் இருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டார். உடனே, அந்த பெண்மணி, வித்யரூபிணியை அழைத்து, இறைவனின் மனதை எளிதாக இசையின் மூலம் அடையலாம் என்றும் உமக்கு தெரிந்த ஏதேனும் ஒரு தெய்வீக பாடலை உன் அடிமனதில் இருந்து பாடுமாறு கூறினார்.

இதனைக் கேட்ட வித்யரூபிணி எந்தப் பாடலைப் பாடுவது என்று யோசித்தாள். அந்த பெண்மணி மீண்டும் வித்யரூபிணியைப் பார்த்து உனக்கு பிடித்த எந்த பாடலை வேண்டுமானாலும் பாடுமாறு கூறினாள். வித்யரூபிணிக்கு அந்த சமயம் எந்த பாடலும் நினைவுக்கு வராததால் தாமாக ஏதேனும் ஒரு பாடலைப் பாடலாம் என்று நினைத்தாள். பாடத் துவங்கும் முன்பு வித்யரூபிணி தன் அடிமனதில் அம்மனை நினைத்து பிரார்த்திவிட்டு பாடுவதற்குத் துவங்கினாள்.

எந்தன் வாழ்வில் ஒளியை ஏற்ற

நீயே துணையாக வர வேண்டும்

நெஞ்சம் முழுதும் நிறைந்த ஆசை

நிறைவேற நீயே துணையாவாய் (எந்தன்)

(1)

வானுயர் சாதிக்க என்னை அருள்வாயா

ஏக்கங்கள் தீர்த்தே அன்பினைத் தருவாயா

எந்தன் நெஞ்சின் ஆசை யாவும்

உந்தன் அருளில் நிறை வேறும்

எந்தன் தாயே உந்தன் மகளின்
ஆசையை நிறைவேற்றித் தருவாய் (எந்தன்)

(2)

அம்மா என்றே அழைத்திட வருவாயே
உந்தன் மகளின் ஆசையை அருள்வாயே
கண்ணில் உள்ள ஏக்கம் கூறும்
எந்தன் வாழ்வின் நோக்கத்தை
எந்தன் வாழ்வில் வளமை அருளி
என்னை வென்றிட செய்வாய் (எந்தன்)

இந்தப் பாடலை வித்யரூபிணி பாடும் பொழுது காற்றுடன் கூடிய மழைப் பெய்தது, மேலும் பக்கத்தில் இருந்த கம்பியில் மாட்டி இருந்த மாலை வித்யரூபிணியின் கழுத்தில் விழுந்தது. இதைக் கண்டு வித்யரூபிணி மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். தன்னை ஒரு பாடல் பாடச் சொன்ன அருகில் இருந்த பெண்மணியின் காலில் விழுந்து வணங்கினாள்.

பின்பு அம்மனைத் தரிசித்து விட்டு வீட்டிற்கு வந்து தன் தாயிடமும் தந்தையிடமும் கோவிலில் நிகழ்ந்தவற்றைக் கூறினாள். இதனைக் கேட்ட வித்யரூபிணியின் தந்தை செந்தில்குமரனும், தாய் கனிஷ்காவும் ஈடில்லா மகிழ்ச்சி அடைந்தனர். வித்யரூபிணி கோவிலில் நிகழ்ந்ததை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து மகிழ்ந்துக் கொண்டிருந்தாள். மேலும், அவள் தான் பத்மஸ்ரீ விருது பெறவேண்டும் என்று நினைத்தது நிச்சயமாக நிறைவேறும் என்று உறுதியாக நம்பினாள்.

வித்யரூபிணி கவிதைகள் எழுதுவதற்கு சில தலைப்புகளை தேர்ந்தெடுத்தாள். அவ்வாறு அவள் தேர்தெடுத்து கொண்டிருக்கும் பொழுது, தம்முடைய கவிதைகள் யாவும், அதனைப் படிப்போரின்

மனதில் என்றும் நிற்க வேண்டும். யாரேனும் சொற்பொழிவுகள் அல்லது மேடையில் பேசும் பொழுது, தனது கவிதை வரிகளை மேற்கோள் காட்டி பேசவேண்டும் என்றும் நினைத்தாள். மேலும், தம்முடைய கவிதைகள் யாவும் ஒவ்வொருவர் மனதிலும் நல்ல விதைகளை விதைக்க வேண்டும் என்றும் அவள் விரும்பினாள்.

வித்யரூபிணிக்கு நினைத்த ஐந்து நிமிடத்தில் கவிதை எழுதும் திறமை இருந்தது. ஆனால், இது வித்யரூபிணிக்கு தெரியவில்லை. ஆனால், சினிமா பாடல்களில் சில பாடல்களை தனக்கேற்ப மாற்றி அவ்வப்போது பாடிக்கொண்டிருந்தாள். இவ்வாறு அவள் ஒருநாள் பாடிக்கொண்டிருக்கும் பொழுதுதான் வித்யரூபிணிக்கு தனக்கு விரைவாக கவிதை வரிகளை கோர்க்கும் திறமை உள்ளதை அவள் அறிந்தாள். இதனை அறிந்த பிறகு, வித்யரூபிணி மேலும் நம்பிக்கையுடனும் கவனத்துடனும் கவிதைத் தொகுப்பினை வெளியிட முற்பட்டாள்.

வித்யரூபிணி கவிதை தொகுப்பு புத்தகத்தின் தலைப்பைத் தேர்ந்தெடுப்பதில் மிக கவனமாக இருந்தாள். தொகுப்பு நூலின் தலைப்பு அனைவரையும் ஈர்க்கும் வகையாக இருக்க வேண்டும் என்று எண்ணினாள். பலமுறை யோசித்து தனது கவிதை தொகுப்பினை "மாற்றமே மாறாதது" என்ற தலைப்பில் வெளியிடலாம் என்று முடிவு செய்தாள். புத்தகத்தின் தலைப்பை முடிவு செய்த பிறகு, இந்த புத்தகத்தில் 25 கவிதைகளை வெளியிடலாம் என்ற முடிவுக்கு வந்தாள். அதன் பிறகு, உள்ளே இருக்கும் கவிதைகளின் தலைப்புகளும் படிப்போரின் மனதை ஈர்க்குமாறு தேர்ந்தெடுத்தாள். இரண்டு மாதங்களுக்குள் 25 கவிதைகளை எழுதி அதனை வெளியிட்டாள். புத்தகத்தினை வெளியிட்ட பிறகு, அதனை தனது உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் என தனக்குத் தெரிந்தவர்கள், பழக்கமானவர்களிடம் கொடுத்து அவர்களின் கருத்தினைக் கேட்டாள். வித்யரூபிணியின் கவிதைகளை படித்த அவளது பெற்றோர் அவளை நினைத்து பெருமிதம் கொண்டனர். இந்தப் புத்தகத்தினை படித்த அனைவரும் எல்லா கவிதைகளும் நன்றாக இருக்கிறது என்று வித்யரூபிணியை

பாராட்டினர். ஆனால், வித்யரூபிணி தன்னைப் பாராட்டுபவர்கள் அனைவரும் தனக்குத் தெரிந்தவர்கள். எனவே, அவர்கள் தமக்காக கவிதைத் தொகுப்பு நன்றாக இருக்கிறது என்று கூறுகிறார்கள் என்று நினைத்தாள். இதற்கிடையில், வித்யரூபிணியின் கவிதைகள் பலருக்கும் பிடித்து, பலரும் அவளைப் பாராட்டிய போதும், ஒரு சிலர் வித்யரூபிணியை இவை அனைத்தும் வீண் முயற்சியெனக் கூறி அவளை அவமதித்தனர். தமக்குச் சற்றும் அறிமுகம் இல்லாத யாரேனும் ஒருவர், தம் கவிதை தொகுப்பினைப் பற்றிக் கூறினால் நன்றாக இருக்கும் என்று நினைத்தாள். வித்யரூபிணி தமது கவிதை தொகுப்பிற்காக ISBN எண் மற்றும் காப்புரிமையும் பெற்றுக் கொண்டாள். இதனை அடுத்து, வித்யரூபிணி தமது புத்தகத்தினை அரசாங்க நூலகத்திற்கு அனுப்பினாள். இருபது நாட்கள் கழித்து, அரசாங்க நூலகத்தில் இருந்து, வித்யரூபிணியின் புத்தகத்தினை தங்கள் நூலகத்தில் தேர்வுச் செய்துக்கொண்டதாக ஒரு கடிதம் அவளுக்கு வந்தது. இதனைக் கண்டு வித்யரூபிணி பெரிதும் சந்தோஷம் அடைந்தாள். ஆறு மாதங்களுக்கு பிறகு, முகநூலில் வித்யரூபிணியின் கவிதை தொகுப்பில் இடம் பெற்றுள்ள தாய்மை என்ற தலைப்பில் உள்ள கவிதை "அன்னையர் தினத்தன்று" வெகு பரவலாக பகிரப்பட்டது. அதில் முகநூலில் பகிர்ந்த முதல் நபர், கவிதை ஆசிரியர் வித்யரூபிணி என்பதையும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை அறிந்த வித்யரூபிணியின் நண்பர்கள், வித்யரூபிணியைப் தொடர்பு கொண்டு அவளைப் பாராட்டினர். இதைக் கேட்டு வித்யரூபிணி அளவில்லா மகிழ்ச்சி அடைந்ததோடு கவிதை தொகுப்புகள், கதை புத்தகங்கள் மட்டும் இன்றி மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களும் எழுதலாம் என்று எண்ணினாள். இது தொடர்பாக யோசித்து கொண்டிருந்த வித்யரூபிணிக்கு ஒரு யோசனை வந்தது. மென்பொருள் பயிற்சி நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த வித்யரூபிணி, தமது நிறுவனத்தினால் பல்வேறு இடங்களில் உள்ள மாணவர்களும் பயன்பெற வேண்டும் என்று

எண்ணினாள். எனவே, மென்பொருள் பயிற்சி நிறுவனத்தை தனது ஊரில் மட்டும் நடத்தாமல் இணையத்தின் மூலமாக மென்பொருள் பயிற்சியை வழங்க வேண்டும் என்று எண்ணினாள். இந்த இணையதளத்தின் மூலமாக மாணவர்கள் மென்பொருள் தொடர்புடைய பல்வேறு பாடங்களுக்கு பதிவு செய்த பின்னர், அவர்களுக்கு ஒரு பதிவு எண் மற்றும் கடவுச்சொல் கொடுக்கப்படும். இதனை வைத்து அந்த இணையத்தளத்தில் மாணவர்கள் உள்நுழைந்ததும், அவர்களுக்கான அன்றைய அட்டவணை நாட்காட்டியில் கொடுக்கப்பட்டிருக்கும். மேலும் அவர்களுக்கான பாடப்புத்தகங்களை வித்யரூபிணி தாமே எழுதி இருந்தாள். மேலும் அந்த இணையதளத்தின் மூலம் மாணவர்கள் தங்கள் சந்தேகங்களை தெளிவுப் படுத்தி கொள்ளவும், மாதிரி தேர்வுகள் எழுதுவதற்கும், படிப்பு முடிந்த பிறகு சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் வகையில் அந்த இணையத்தளத்தினை வித்யரூபிணி வடிவமைத்திருந்தாள். இவ்வாறான ஒரு இணையத்தளத்தினை வித்யரூபிணி உருவாக்கினாள். இணையதளம் உருவாக்கிய பிறகு, தனது இணையதளம் மூலமாக கற்பிக்கப்படும் பாடங்களுக்கு அவளாகவே புத்தகங்களையும் எழுதினாள். இது போன்று ஏழு வித பாடங்களுக்கான புத்தகங்களை வித்யரூபிணி வெளியிட்டாள். இந்த இணையதளம் துவங்கிய நாட்களில் அதனை விளம்பரப்படுத்த வித்யரூபிணி ஆயத்தமானாள். தனது இணையதளம் பற்றித் தன்னுடைய கல்லூரி ஆசிரியர்களிடம் முதலில் கூறினாள். ஆசிரியர்கள் அனைவருக்கும் வித்யரூபிணியின் நோக்கம் பிடித்திருந்தது. வித்யரூபிணியின் ஆசிரியர்கள் அவர்களது மாணவர்களுக்கு இந்த இணையதளம் பற்றி விவரித்தனர். வித்யரூபிணியும் அவளது இணையத்தளத்தினைப் பற்றி அவளது கல்லூரி மாணவர்களுக்கு எடுத்துரைத்தாள். வித்யரூபிணி பயின்ற கல்லூரியில் இருந்து சில மாணவர்கள் அந்த இணையதளத்தில் இணைந்தார்கள். இதனைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த வித்யரூபிணி தனது இணையத்தளத்தினை அடுத்த படிக்கு கொண்டுச் செல்ல வேண்டும் என்று எண்ணினாள். இதனால் அருகில் இருக்கும் கல்லூரிகளுக்கு நேரில் சென்று, தமது இணையதளத்தை பற்றிக்

கூற வேண்டும் என்று பல்வேறு கல்லூரிகளுக்கு சென்றாள். சில கல்லூரிகளில் வித்யரூபிணியின் நோக்கத்தை மதித்தார்கள். ஆனால், இது போன்று வேறொரு கல்லூரிக்கு சென்ற போது, அந்த கல்லூரியின் முதல்வர் வித்யரூபிணியின் நோக்கத்திற்குச் சற்றும் செவி சாய்க்கவில்லை. மேலும், அவர் வித்யரூபிணியை ஊக்குவிக்காமல் எதிர்மறையாக பேசினார். இதனால் பெரிதும் மனம் உடைந்த வித்யரூபிணி தன்னை இகழ்ந்தவர் வாயாலே தம்மை பாராட்ட வைக்க வேண்டும் என்று நினைத்தாள். உடனே, வித்யரூபிணி அந்தக் கல்லூரியின் முதல்வரிடம் ஒரு நாள் நீங்கள் என்னிடம் வந்து நிற்கும் நிலை வரும் என்று மிக ஆவேசத்துடன் கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

இதனை அடுத்து வித்யரூபிணி முன்பை விட மிக வேகமாக செயல்படத் துவங்கினாள். இன்னும் சரியாக ஓராண்டிற்குள் நாம் ஐநூறு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற உறுதி கொண்டாள். இதனை உண்மையாக்க வித்யரூபிணி கடுமையாக உழைக்கத் துவங்கினாள். தம்மை சுற்றியுள்ள ஊர்களில் உள்ள மாணவர்கள் மட்டும் இல்லாமல் வெவ்வேறு நகரில் உள்ள மாணவர்களுக்கும் தம்முடைய இணையதளம் பற்றித் தெரிய வேண்டும் என்று நினைத்தாள் வித்யரூபிணி. எனவே, தனது இணையதளத்தை ஆன்லைன் மூலம் விளம்பரப் படுத்த துவங்கினாள். இவ்வாறு இணையத்தில் விளம்பரப் படுத்த துவங்கியதில் இருந்து இன்னும் நிறைய மாணவர்கள் வித்யரூபிணியின் இணையதளத்தில் பதிவு செய்து பல்வேறு படிப்புகளை படித்தனர். இப்படியே, ஆறு மாதங்களில் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் வித்யரூபிணியிடம் பயிற்சி பெற்றார்கள். இதனால் வித்யரூபிணியின் வருமானமும் பெருகியது. இந்த ஆண்டு இறுதிக்குள் ஐநூறு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்ற தனது கொள்கையில் வித்யரூபிணி மிக உறுதியாக இருந்தாள். இந்த ஆறு மாதங்களில் வித்யரூபிணியின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு அவளது பெற்றோர் பெருமிதம் கொண்டனர்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, வித்யரூபிணி படித்த கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் கூட்டம் நடைப்பெற்றது. இதில் வித்யரூபிணிக்கு தனது கல்லூரியின் சிறந்த தொழிலதிபர் என்ற விருதினை கல்லூரியின் சார்பாக அளித்தனர். இத்தனை நாட்களாக அங்கீகாரத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்த வித்யரூபிணிக்கு இந்த முதல் வெற்றி பெரிதும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இருப்பினும் அவள் இந்த ஆண்டின் பத்மஸ்ரீ விருதினையும் நாம் பெற வேண்டும் என்று எண்ணினாள். இதனையடுத்து, தனது இணையதளத்தில் பயிற்றுவிக்கும் பாடங்களுக்கான புத்தங்கங்களை வித்யரூபிணி புதுப்பிக்க துவங்கினாள். இதற்கு முன் எழுதிய புத்தகங்களின் இரண்டாவது பதிப்பினை வெளியிட்டாள். இந்த புத்தகங்களை தனது ஊரில் உள்ள நூலகத்திற்கு அனுப்பினாள். அந்த நூலகத்தின் நிர்வாகியும் வித்யரூபிணியின் புத்தகத்தினை தனது நூலகத்தில் பிரசுரம் செய்வதற்கு ஒப்புக்கொண்டார். வித்யரூபிணி தனது இணையதளத்தில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் இல்லாமல் மற்ற மாணவர்களுக்கும் தம்முடைய புத்தகங்கள் சேர வேண்டும் என்று எண்ணினாள். இதனை அடுத்து, வித்யரூபிணி சொந்தமாக வெளியீட்டு நிறுவனம் ஒன்றை துவங்க வேண்டும் என்று நினைத்தாள். இது குறித்து தனது பெற்றோரிடம் வித்யரூபிணி கூறியபோது, அவர்களும் இதற்கு சம்மதித்தனர். இதனை அடுத்து தனது மென்பொருள் பயிற்சி நிறுவனத்தைப் பதிவு செய்த தணிக்கையாளரிடம் இதனைப் பற்றி வித்யரூபிணி கூறினாள். அவர், வித்யரூபிணியிடம் தேவையான தகவல்களை கேட்டறிந்தபின், புத்தக வெளியீட்டு நிறுவனத்தைப் பதிவு செய்து, அதற்கான ஆவணங்களை வித்யரூபிணியிடம் கொடுத்தார். இதனை அடுத்து தனது வெளியீட்டு நிறுவனத்தின் பெயரில் அனைத்து புத்தகங்களையும் வித்யரூபிணி வெளியிடத் துவங்கினாள். தனது நிறுவனத்தில் வெளியிடும் புத்தகங்களை முகநூல் பக்கத்திலும் வெளியிட்டாள். இதனால், வித்யரூபிணியின் புத்தகப் படைப்புகள் மேலும் பிரபலமாகத் துவங்கியது. வித்யரூபிணியின் புத்தகங்கள், மிக எளிய நடையில் மாணவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம்

இருந்ததால் மாணவர்கள் வித்யரூபிணியின் புத்தகங்களை விருப்பத்துடன் வாங்குவதற்கு முன்வந்தனர். இதனால், வித்யரூபிணியின் மென்பொருள் பயிற்சி நிறுவனம் மற்றும் புத்தக வெளியீட்டு நிறுவனமும் விரைவாக பிரபலம் ஆகியது. வித்யரூபிணியின் புகழ் திசையெட்டும் எட்டியது. இந்த சூழலில், ஒரு பெரிய பத்திரிக்கை நிறுவனம் வித்யரூபிணியை நேர்காணல் எடுக்க விரும்பியது. இது தொடர்பாக வித்யரூபிணியைத் தொடர்பு கொண்டு அந்தப் பத்திரிக்கை நிறுவனத்தின் உரிமையாளர் பேசிய பொழுது, வித்யரூபிணி தன் பெற்றோரிடம் கேட்டு விட்டுக் கூறுவதாக அவரிடம் சொன்னாள். எனவே, அந்தப் பத்திரிக்கை நிறுவனத்தின் உரிமையாளர், இன்னும் இரண்டு நாட்களுக்குள் எங்களுக்கு தெரியப்படுத்துமாறு கூறினார். வித்யரூபிணியும் அதற்கு ஒப்புக்கொண்டாள். இது தொடர்பாக வித்யரூபிணி அவளது பெற்றோரிடம் பேசிய பொழுது, வித்யரூபிணியின் தாய் கனிஷ்கா இதற்கு ஒப்புக்கொள்ள மறுத்தார். பின்பு, வித்யரூபிணியின் தந்தை செந்தில்குமரன் எடுத்துரைக்க கனிஷ்கா ஒப்புக்கொண்டாள். பின்பு, வித்யரூபிணி அந்த பத்திரிக்கை நிறுவனத்தின் உரிமையாளரை தொடர்புக் கொண்டு நேர்காணலுக்கு அவளது சம்மதத்தை தெரிவித்தாள். அந்தப் பத்திரிக்கை நிறுவனத்தின் உரிமையாளர், இன்னும் இரண்டு நாட்களில் நேர்காணல் எடுப்பதாகக் கூறினார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, வித்யரூபிணியின் வீட்டிற்கு அந்த நிறுவனத்தில் இருந்து வந்திருந்தனர். வித்யரூபிணி இது தனது முதல் நேர்காணல் என்பதால் சற்றுப் பதட்டமாக இருந்தாள். இதனை அறிந்த வித்யரூபிணியின் பெற்றோர் அவளை ஊக்குவிக்கும் விதமாக பேசினர். அவர்களின் பேச்சைக் கேட்டு வித்யரூபிணியும் சற்றுத் தைரியமாக நேர்காணலுக்குத் தயாராகினாள். சற்று நேரத்தில் நேர்காணல் துவங்கியது. பத்திரிக்கையாளர் முதலில் வித்யரூபிணியிடம் அவளைப் பற்றியும், அவள் குடும்பத்தை பற்றியும் கேட்டார். வித்யரூபிணி அவளது பெற்றோரைப் பற்றியும், அவளது படிப்பு மற்றும் அவளது தொழில் பற்றியும் கூறினாள். அதனையடுத்து, வித்யரூபிணிக்கு எவ்வாறு

தொழிலதிபர் ஆகவேண்டும் என்ற எண்ணம் வந்தது என்றும் அது எவ்வாறு நிகழ்ந்தது என்றும் வினவினார். வித்யரூபிணி அவளது லட்சியம் மற்றும் தொழிலதிபர் ஆனது பற்றியும் விவரமாக கூறினாள். இவ்வாறு இந்த நேர்காணல் சுமாராக ஒரு மணி நேரம் வரை தொடர்ந்தது. இறுதியாக, பத்திரிகையாளர் வித்யரூபிணியிடம், இன்றைய இளைஞர்களுக்கு உதாரணமாகத் திகழும் நீங்கள் அவர்களுக்கு என்ன கூற விழைகிறீர்கள் என்று கேட்டார். இதற்கு வித்யரூபிணி, "என்னை பொறுத்தவரை இந்த உலகத்தில் இறைவனால் படைக்கப்பெற்ற ஒவ்வொருவரும் திறமையானவர்கள் தான். ஆனால், எல்லோரிடமும் நாம் ஒரே விதமான திறமையை எதிர்பார்க்க முடியாது. ஒருவர் சிறந்தப் பாடகராக இருக்கலாம், மற்றொருவர் சிறந்த எழுத்தாளராக இருக்கலாம், மற்றொருவர் சிறந்த நடன கலைஞராக இருக்கலாம். எனவே, ஒவ்வொருவரும் தனக்கு எது விருப்பமோ அதனையே முடிவு செய்யவேண்டும். மேலும், தங்களின் விருப்பம் அல்லது பொழுதுபோக்கினை தங்களின் தொழிலாக மாற்றினால், நாம் ஒரு நாள் கூட கஷ்டப்பட்டு வேலைப்பார்க்க வேண்டாம். உதாரணத்திற்கு, ஒருவருக்கு சாப்பிடுவது மட்டுமே பொழுதுபோக்காக இருக்குமாயின், அவர் மக்களுக்கு பிடித்த மாதிரி ஏதேனும் ஒரு சமையல் பொருளைத் தயாரிக்கலாம். இவ்வாறு தங்களுக்கு எதில் ஆர்வம் அதிகமோ அதனை ஒரு தொழிலாக மாற்றினால், நிச்சயம் வெற்றி பெறலாம்", என்று கூறினாள். நேர்காணலின் இறுதியாக வித்யரூபிணி, தன்னுடைய பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள், மற்றும் இவை அனைத்தும் சாத்தியமாவதற்கு தனக்கு எப்பொழுதும் துணையாக இருக்கும் இறைவனுக்கும் நன்றி கூறினாள். இத்துடன் நேர்காணல் நிறைவடைந்தது.

நேர்காணல் முடிந்து ஒரு வாரத்தில், வித்யரூபிணியின் நேர்காணல் பல சமூக ஊடகங்களிலும், முக்கிய தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பாகியது. இதனைக் கண்ட வித்யரூபிணி மற்றும் அவளது பெற்றோரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். வித்யரூபிணியின் நேர்காணலைப் பார்த்த அவளது

உறவினர்கள், நண்பர்கள், பலரும் அவளைத் தொடர்பு கொண்டு பாராட்டினர். இதனையடுத்து, வித்யரூபிணியின் மென்பொருள் பயிற்சி நிறுவனத்தின் இணையதளம் மற்றும் புத்தக வெளியீட்டு நிறுவனமும் பிரபலமாகியது. புதிய எழுத்தாளர்கள் பலரும் வித்யரூபிணியின் புத்தக வெளியீட்டு நிறுவனத்தில் தங்களது புத்தகங்களை வெளியிட முன்வந்தனர். இதனைக் கண்டு வித்யரூபிணி வியந்து நின்றாள். சாதாரணமாக ஒரு மென்பொருள் பயிற்சி நிறுவனம் துவங்கி அதனையடுத்து புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்றைத் துவங்கி அதில் பல எழுத்தாளர்கள் தன்னுடைய பதிப்பகத்தில் புத்தகங்களை வெளியிட முன்வந்ததை நினைத்து வித்யரூபிணி மிகவும் பெருமிதம் கொண்டாள். இத்தகைய வளர்ச்சிக்கு பிறகு, வித்யரூபிணி சில மாணவர்களின் கல்விக்கு உதவ வேண்டும் என்று நினைத்தாள். இதனின் ஆரம்பக்கட்டமாக, தன்னுடைய இணையதளம் மூலம் பல்வேறு பாடங்களை படிக்கும் மாணவர்களுக்கு, அவர்களது குடும்ப சூழலைப் பொறுத்து, சில மாணவர்களுக்கு இலவசமாகவும் பயிற்சி அளிக்க துவங்கினாள். தங்கள் மகளின் இந்த மனப்பான்மையை கண்டு வித்யரூபிணியின் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஒரு நாள் வித்யரூபிணியின் புத்தக வெளியீட்டு நிறுவனத்திற்கு ஒரு நபர் வந்திருந்தார். அலுவலகத்தினுள் வந்த அந்த நபர் வித்யரூபிணியைப் பார்த்து ஆச்சரியத்துடனும் அதிர்ச்சியுடனும் நின்றார். அவரைப் பார்த்த வித்யரூபிணியும் வியந்து நின்றாள். ஏனெனில், அந்த நபர் ஆறேழு மாதங்களுக்கு முன்னர், வித்யரூபிணி தனது மென்பொருள் பயிற்சி நிறுவனத்தைப் பற்றி எடுத்துரைக்க பல கல்லூரிகளுக்குச் சென்ற போது, வித்யரூபிணியிடம் எதிர்மறையாக பேசிய ஒரு கல்லூரியின் முதல்வர் ஆவார். அங்கிருந்து, உடனே விலக நினைத்த அந்த நபரை, வித்யரூபிணி தடுத்து நிறுத்தினாள். அவரிடம் வித்யரூபிணி, "அன்று நான் உங்களிடம், ஒருநாள் நீங்கள் என்னிடம் வந்து நிற்கும் நிலை வரும் என்று ஒரு ஆவேசத்தில் தான் கூறினேன். ஆனால், அது இன்று உண்மையாக நிகழும் என்று நான் நினைக்கவில்லை. அன்று

என்னால் முடியாது என்று நீங்கள் எதிர்மறையாக பேசிய உங்கள் வாயால் என்னைப் புகழ வேண்டும் என்று தான் நினைத்தேன். இன்று நீங்கள் உங்கள் புத்தகத்தை என்னுடைய பதிப்பகத்தில் வெளியிடுவதற்காக நீங்கள் வந்ததே என்னைப் புகழ்ந்ததற்கு சமமாகும். இனிமேல் எப்பொழுதும் யாருடைய திறமையையும் குறைவாக மதிப்பிடாதீர்கள். கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்" என்று கூறினாள். இதனைக் கேட்ட பின்பு அந்த கல்லூரியின் முதல்வர் அங்கிருந்து உடனே கிளம்பினார்.

இதனையடுத்து, வித்யரூபிணி தன்னுடைய கடந்த காலத்தை நினைத்து பார்த்தாள். ஒரு காலத்தில் தன்னுடைய உறவினர்கள், நண்பர்கள் என பலரும் தன் மீது சற்றும் நம்பிக்கை இல்லாமல் இருந்ததை நினைத்தாள். தமக்கு இன்று கிடைத்திருக்கும் அங்கீகாரம் மட்டும் கிடைக்காமல் இருந்திருந்தால், இன்றும் அனைவரும் அதே மனப்பான்மையில் தான் இருந்திருப்பார்கள், என்று நினைத்தாள். எனவே, தன்னைப் போன்று திறமைகள் கொண்டு, அங்கீகாரம் கிடைக்காமல் இருக்கும் பலருக்கும் அங்கீகாரம் கிடைக்குமாறு தாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணினாள். ஒரு நாள் வித்யரூபிணியை ஒரு கல்லூரியில் பணிபுரியும் ஒரு பேராசிரியைத் தொடர்பு கொண்டார். அந்த பேராசிரியை வித்யரூபிணியிடம், தங்களது மென்பொருள் பயிற்சி நிறுவனத்தை பற்றியும், புத்தக வெளியீட்டு நிறுவனத்தை பற்றியும், இணையத்தில் பார்த்ததாக கூறினார். மேலும், வித்யரூபிணியை ஒரு நாள் தங்களது கல்லூரிக்கு வந்து, மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். வித்யரூபிணியும் இதற்குச் சம்மதித்தாள். ஒரு வாரத்திற்கு பிறகு, வித்யரூபிணி அந்த கல்லூரிக்குச் சென்றாள். அங்கு மாணவ மாணவிகள், வித்யரூபிணிக்கு வரவேற்புரை, மற்றும் வித்யரூபிணியின் சாதனையைப் பற்றியும் கூறினர். இதனைக் கேட்ட வித்யரூபிணி பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள். இவ்வாறு மாணவ மாணவிகள் பேசியதைக் கேட்ட பிறகு, வித்யரூபிணிக்கு ஒரு யோசனை வந்தது.

கல்லூரி மாணவர்களுக்கு மாதாந்திர போட்டிகள் ஏதேனும் வைத்து, அந்த போட்டியில் வெற்றி பெருபவருக்கு பரிசுத் தொகை வழங்கி அவர்களைப் பற்றி ஒரு கட்டுரையைத் தமது புத்தகத்தில் வெளியிடலாம் என்பதே அந்த யோசனை. அன்றைய நிகழ்ச்சி முடியும் பொழுது இறுதியாக, இதனை அங்கிருக்கும் மாணவர்களிடம் கூறினாள் வித்யரூபிணி. அவளது பேச்சால் ஊக்கமடைந்த மாணவர்கள், இந்த மாதாந்திர போட்டியில் கலந்துக் கொள்வதாக கூறினர். இதையடுத்து, அன்றிரவு வீட்டிற்கு வந்த வித்யரூபிணி என்ன மாதிரியான போட்டிகள் வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது, ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு விதமான போட்டிகளை நடத்தலாம் என்று வித்யரூபிணி நினைத்தாள். அவ்வாறு, இந்த மாதம் மாணவர்கள் அனைவரும் அவர்களைப் பற்றியும், அவர்கள் இது வரை செய்திருக்கும் சின்ன சாதனைகள் அல்லது அவர்கள் இது வரை பெற்றிருக்கும் வெற்றிகள், அவர்களது திறமைகள் பற்றி இரண்டாயிரம் வார்த்தைகளுக்கு மிகாமல் ஒரு கட்டுரை எழுதுமாறு ஒரு போட்டி வைக்கலாம் என்று நினைத்தாள். இந்தப் போட்டி பற்றி முகநூல் மற்றும் அவளது இணையதளம், அவளது புத்தகங்களிலும் மற்றும் சில முக்கிய பத்திரிகைகளின் செய்தித்தாளிலும் விளம்பரப் படுத்தினாள். இதைப் பல மாணவர்களும் பார்த்து அதில் கலந்துக் கொள்ள விரும்பினர். வித்யரூபிணி நடத்தும் இந்த போட்டியில் மாணவர்கள் பலர் கலந்துக் கொண்டு, அவர்களைப் பற்றிய கட்டுரையைச் சமர்ப்பித்தனர். இந்தப் போட்டியில் கலந்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு எந்த வித வயது வரம்பும் இல்லையெனினும், பெரும்பாலாக பத்தாம் வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவர்களே கலந்துக் கொண்டனர். போட்டியின் இறுதி நாள் முடிவதற்குள், ஐநூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன. போட்டியின் இறுதி நாள் முடிந்ததும், போட்டியின் முடிவுகளை வெளியிடும் நாளை வித்யரூபிணி வெளியிட்டாள். வித்யரூபிணி ஒவ்வொரு கட்டுரையாக எடுத்து படிக்கத் துவங்கினாள். இந்த போட்டியில் பெரும்பாலும் பத்தாம் வகுப்பிற்கு

மேல் படிக்கும் மாணவர்களே கலந்துக் கொண்டிருந்தாலும், ஒரே ஒரு இரண்டாம் வகுப்பு படிக்கும் ஸ்நேஹாஸ்ரீ என்னும் மாணவியும் இந்தப் போட்டிக்கு அவளது கட்டுரையைச் சமர்பித்திருந்தாள். இதனைப் பார்த்த வித்யரூபிணி இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவி எப்படி இரண்டாயிரம் வார்த்தைகளுக்கு மிகாமல் ஒரு கட்டுரை எழுதுவாள் என்று சற்று வியப்புடன் அந்தக் கட்டுரையை எடுத்து வாசிக்கத் துவங்கினாள். அதில் அந்த இரண்டாம் வகுப்பு படிக்கும் சிறுமி, தன்னுடைய பெயர், மற்றும் தன்னுடைய பெற்றோரின் பெயரினை குறிப்பிட்டு அந்த கட்டுரையைத் துவங்கி இருந்தாள். இவ்வாறு தன்னுடைய படிப்பினைப் பற்றி குறிப்பிட்ட பிறகு, தன்னுடைய பொழுதுபோக்கு, பள்ளியில் உடன் பயிலும் நண்பர்கள், தனக்குப் பிடித்த ஆசிரியை என அவளுக்கு பிடித்தமானவற்றை பற்றி நிறைய எழுதி இருந்தாள். தான் பள்ளியில் கலந்துக் கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றது பற்றியும் அந்த கட்டுரையில் ஸ்நேஹாஸ்ரீ குறிப்பிட்டிருந்தாள். இவை எல்லாவற்றையும் குறிப்பிட்ட பிறகு, இறுதியாக ஸ்நேஹாஸ்ரீ, அந்த கட்டுரையில் தனக்கு வீணை வாசிக்க வேண்டும் என்று மிகவும் ஆசை என்றும், இந்தப் போட்டியில் கலந்துக் கொண்டு நான் வெற்றி பெற்றால், அந்தப் பணத்தை கொண்டு நான் வீணை வாங்குவேன் என்றும் தன் மழலை மனம் மாறாமல் எழுதியிருந்தாள். இந்தக் கட்டுரையைப் படித்த வித்யரூபிணி ஆச்சர்யத்துடன் இந்தக் குழந்தையின் கட்டுரையே வெற்றிப் பெற்றதாக அறிவித்தாள். மேலும், வித்யரூபிணி அந்தக் குழந்தையை நேரில் சந்தித்து, பரிசினை வழங்க வேண்டும் என்று எண்ணினாள். எனவே, மறுநாள் அந்தக் குழந்தை அனுப்பிய கட்டுரையில் இருந்த தொலைபேசி எண்ணில் அக்குழந்தையின் பெற்றோரைத் தொடர்புக் கொண்டு, வித்யரூபிணி அவர்களது வீட்டிற்கு நேரில் வந்து அவர்களது குழந்தைக்கு பரிசினை வழங்குவதாக கூறினாள். இதனைக் கேட்டு ஸ்நேஹாஸ்ரீயின் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர். மறுநாள், வித்யரூபிணி ஸ்நேஹாஸ்ரீயின் வீட்டிற்குச் சென்று, ஸ்நேஹாஸ்ரீயைப் பார்த்து பரிசினை வழங்கினாள். மேலும்

ஸ்நேஹாஸ்ரீயின் பெற்றோரிடம் ஸ்நேஹாஸ்ரீக்கு வீணை வாசிக்க கற்றுக்கொடுக்குமாறும் கூறிவிட்டு வித்யரூபிணி வீட்டிற்கு வந்தாள்.

இதனையடுத்து ஒரு வாரத்தில் சுதந்திர தின விழா நடைபெறவிருந்தது. வித்யரூபிணி தான் புத்தக வெளியீட்டு நிறுவனம் துவங்கிய பிறகு வரும் முதல் சுதந்திர தின விழா என்பதால், இதனை வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும் என்று எண்ணினாள். இதனால், தனது நிறுவனத்தில் பணிபுரியும் அனைவரையும் அழைத்து இது குறித்து பேசினாள் வித்யரூபிணி. அலுவலகத்தில் பணிபுரியும் ஒவ்வொருவரும் அவரவர் கருத்தையும் விருப்பத்தையும் கூறினர். இறுதியாக, சுதந்திர தினத்தன்று, கொடியேற்றத்திற்கு பிறகு பாடல், நடனம் என பல நிகழ்ச்சிகள் செய்வதாக முடிவு செய்தனர். இந்த ஒரு வாரத்தில் அனைவரும் சுதந்திர தின விழாவிற்கு வெகுவாக தயாராகிக் கொண்டிருந்தனர். சுதந்திர தின விழா நாள் வந்தது. வித்யரூபிணி அன்று காலை தனது நிறுவனத்திற்கு எப்பொழுதும் வருவதை விட சற்று சீக்கிரமாகவே வந்தாள். நிறுவனத்தில் பணிபுரியும் அனைவரும் வந்தவுடன் கொடியேற்றம் துவங்கியது. கொடியேற்றம் முடிவடைந்தவுடன் பிற நிகழ்ச்சிகள் துவங்கியது. முதலில் பாடல் நிகழ்ச்சி துவங்கியது. ஒவ்வொருவராக அவர்களுக்கு பிடித்த தேசிய பாடலை பாடிக்கொண்டு வந்தனர். இறுதியாக அனைவரும் வித்யரூபிணியை பாடுமாறு கேட்டனர். வித்யரூபிணி தனக்கு தெரிந்த அனைத்து தேசிய பாடல்களையும் அனைவரும் பாடிவிட்டீர்கள். அப்புறம் எவ்வாறு நான் பாட முடியும் என்று கேட்டாள். இருப்பினும், எல்லோரும் வற்புறுத்தியதால் வித்யரூபிணி எப்பொழுதும் போன்று, அவளுடையப் பாடலை பாடத் துவங்கினாள்.

எங்கள் தேசம் எங்கள் இந்தியா

எங்கள் இந்தியா இது எங்கள் இந்தியா

எம் தாயின் மடியில் சுகம் கண்டோம்

தாய்மையின் மறுஉருவே நீதான் இந்தியா - (எங்கள்)

(1)

விண்ணும் மண்ணைத் தொட்டாலும்

மண் விண்ணை நோக்கி பறந்தாலும்

எங்கள் இளையபாரதம் என்றும் போராடும்

பாரத பெருமை காத்திட போராடும் - (எங்கள்)

(2)

எளியோரும் வலியோரும் இனிமை

வாழ்வு வாழ்ந்திடவே - இனி வரும்

நாளில் முயற்சி செய்வோம்

முயன்று கொண்டு தடையறுப்போம்

எழுச்சி கொண்டு வழி வகுப்போம் - (எங்கள்)

(3)

விடியும் நல்ல காலைதனில்

வெற்றி என்னும் வெளிச்சம் வரும்

எங்கள் சுவாசம் கூட

தேசப்பற்று வீசுமே - (எங்கள்)

(4)

இளைய பாரதம் வருக வருகவே

நம் பாரதத்தின் பெருமை காக்க

வருக வருகவே - பாரத பெருமை நீ போற்று

பாரதம் உன்னை வாழ்த்திடும் - (எங்கள்)

இந்தப் பாடலை வித்யரூபிணி பாடி முடித்தவுடன் அவளுடன் பணிபுரிபவர்கள் எழுந்து நின்று கைத்தட்டி அவளைப் பாராட்டினர். மேலும், அவர்கள் இது வரை உங்களுடைய இசை ஆர்வமும் திறமையும் எங்களுக்கு தெரியவில்லை. இன்று தெரிந்துக் கொண்டோம். எனவே, இனிமேல் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் இப்படி ஆடல் பாடலோடு கொண்டாடலாம் என்று கூறினார். வித்யரூபிணியும் இதற்கு சம்மதம் தெரிவித்தாள். இதன் பிறகு, மற்ற நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன. இதனை அடுத்து, வித்யரூபிணி தன்னுடைய நிறுவனத்தில் பணிபுரியும் அனைவருக்கும் நினைவுப் பரிசு கொடுத்து நிகழ்ச்சியை நிறைவு செய்தாள்.

வித்யரூபிணி தனது மென்பொருள் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெரும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் அவர்களது பட்டப்படிப்பு முடிந்தவுடன், ஏதேனும் ஒரு நல்ல நிறுவனத்தில் நல்ல சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்க வேண்டும் அல்லது அவர்களை ஏதேனும் ஒரு தொழில் முனைவோர் ஆவதற்கு ஆயத்தப்படுத்த வேண்டும் என்று எண்ணினாள். இதனை அடுத்து, தன்னுடைய மென்பொருள் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெரும் அனைத்து மாணவர்களுக்கும் தொழில் முனைவோர் பயிற்சியை இலவசமாக பயிற்றுவிக்கலாம் என்று எண்ணினாள். இது தொடர்பான அறிவிப்பை மாணவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தினாள். இந்த அறிவிப்புடன் சேர்த்து அந்த பாடத்தின் பாடத்திட்டத்தினையும் மாணவர்களுக்கு அனுப்பினாள். பாடத்திட்டத்தினை பார்த்த பிறகு ஐம்பது சதவீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த பாடத்தில் இணைந்தார்கள். இந்த பாடத்தை ஆரம்பிக்கும் பொழுது, குறிப்பேடுகள் வைத்து வித்யரூபிணி மாணவர்களுக்கு பயிற்றுவித்து கொண்டிருந்தாள். ஓரிரண்டு மாதங்களுக்கு பின்னர், தொழில் முனைவோர் திட்டத்தினை மாணவர்கள் எளிதாகப் புரிந்துக் கொள்ளும் வண்ணம் ஒரு புத்தகத்தை வெளியிட்டாள். ஆரம்பக்கட்டமாகத் தன்னுடைய நிறுவனத்தில் பயிற்சி பெரும் மாணவர்களுக்கு மட்டும் இந்தப் புத்தகத்தை கொடுத்து வந்தாள். அவர்களிடம் அந்தப் புத்தகத்தினைப்

பற்றி அவர்களுடைய கருத்துகளையும் பெற்றுக் கொண்டாள். மாணவர்களின் கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு, தொழில் முனைவோர் திட்ட புத்தகத்தின் இரண்டாவது பதிப்பினை வெளியிட்டாள். தொழில் முனைவோர் பாடத்திட்டம் ஆரம்பித்த ஆறு மாதங்களில், வித்யரூபிணியின் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் சில மாணவர்கள் சிறு தொழில் ஒன்றை துவங்கினர். மேலும் சில மாணவர்கள் நல்ல நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தனர். சிறிது நாட்களுக்குப் பிறகு, அந்த ஆண்டிற்கான பத்மா விருதுகளுக்கான பரிந்துரைகள் வரவேற்கப்பட்டன. வித்யரூபிணி இந்தப் பரிந்துரைகளில் தன்னைத் தானே தன்னுடைய ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பித்து பரிந்துரைச் செய்துக் கொண்டாள். வித்யரூபிணி இந்த ஆண்டு தமக்கு பத்மஸ்ரீ விருது கிடைக்க வேண்டும் என்று மிகவும் ஆர்வத்துடன் இருந்தாள். வித்யரூபிணி தான் பத்மஸ்ரீ விருதிற்கு விண்ணப்பித்திருப்பதாக தன்னுடைய பெற்றோரிடம் கூறினாள். இதைக் கேட்ட வித்யரூபிணியின் தந்தை செந்தில்குமரன், உனக்கு நிச்சயமாக பத்மஸ்ரீ விருது கிடைக்கும் என்று மனமார வாழ்த்தினார். வித்யரூபிணியின் தாய் கனிஷ்காவும் அவளை ஆசிர்வதித்து, கோவிலுக்கு அழைத்து கொண்டுச் சென்று வந்தாள். இதனையடுத்து, வித்யரூபிணி தமக்கு இம்முறை பத்மஸ்ரீ விருது கிடைக்க வேண்டும் என்று மனதில் நினைத்த வண்ணம் இருந்தாள்.

இதனையடுத்து வித்யரூபிணியின் அலுவலகத்துக்கு ஒரு குழந்தைகள் ஆசிரமத்தின் உரிமையாளர் வந்திருந்தார். அவரைப் பார்த்த வித்யரூபிணி யோசனை கலந்த சிரிப்புடன் அவரை வரவேற்றாள். வித்யரூபிணியின் யோசனைக்கு காரணம், அவரை இதற்கு முன்பு சந்தித்த நியாபகம் அவளுக்கு வந்தது. ஆனால், அவர் யாரென்று வித்யரூபிணிக்குத் தெரியவில்லை. அதனால் சற்று யோசித்தவாறே இருந்தாள். இதனை அறிந்த அந்த ஆசிரமத்தின் உரிமையாளர், வித்யரூபிணியிடம் தாம் ஒரு குழந்தைகள் ஆசிரமம் நடத்தி வருவதாகவும், நீங்கள் ஒரு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தீபாவளி பண்டிகை கொண்டாடுவதற்காக எமது ஆசிரமத்திற்கு

வந்தீர்கள் எனவும் கூறினார். அவர் கூறிய பிறகு, வித்யரூபிணி அவரை அடையாளம் கண்டு கொண்டாள். பிறகு, அன்று நிகழ்ந்தவை அனைத்தையும் நினைவுக் கூர்ந்தாள். அந்த ஆசிரமத்தின் உரிமையாளர், வித்யரூபிணியிடம் இந்த ஆண்டு குழந்தைகள் தின விழாவிற்கு நீங்கள் சிறப்பு விருந்தினராக வந்து, குழந்தைகளுக்கு பாட நூல்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வித்யரூபிணி இதற்கு சம்மதம் தெரிவித்தாள். இதனை அடுத்து, குழந்தைகள் தினத்தன்று, வித்யரூபிணி தனது பெற்றோருடன் அந்த ஆசிரமத்திற்குச் சென்றாள். அங்கு வித்யரூபிணி சென்றதும், அங்கிருந்த குழந்தைகள் வித்யரூபிணிக்கு மலர் கொத்து கொடுத்து, அவளை வரவேற்றனர். இதனால் வித்யரூபிணியும் அவளது பெற்றோரும் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர். குழந்தைகள் அனைவருடனும் நன்றாக வித்யரூபிணி பேசிக்கொண்டிருந்தாள். சற்று நேரம் கழித்து, அனைத்து குழந்தைகளுடன் கேக் வெட்டி குழந்தைகள் தினத்தை கொண்டாடினர். அங்கிருந்த குழந்தைகளை வித்யரூபிணி தங்களுக்கு பிடித்த பாடல்களை பாடுமாறு கூறினாள். அதன் பிறகு, சில குழந்தைகள் அவர்களுக்கு பிடித்த பாடலைப் பாடினர். குழந்தைகள் வித்யரூபிணியையும் தம்முடன் சேர்ந்து பாடுமாறு கூறினர். உடனே, வித்யரூபிணி, அவளது பெற்றோர், மற்றும் ஆசிரமத்தில் இருப்பவர்கள் என எல்லோரும் சேர்ந்து ஏதேனும் ஒரு பாடலை பாடலாம் என்று கூறினாள். இதற்கு அனைவரும் சம்மதித்து என்ன பாடல் பாடலாம் என்று யோசித்து கொண்டிருந்தனர். வித்யரூபிணியின் தாய் கனிஷ்கா, வித்யரூபிணியிடம் நீயாகவே ஏதேனும் ஒரு பாடலை பாடு, அதன் பிறகு, எல்லாரும் அதனை திரும்ப பாடுவார்கள் என்றுக் கூறினார். சிறிது நேரம் யோசித்து விட்டு, வித்யரூபிணி அவளது சொந்தப் பாடலை பாடத் துவங்கினாள்.

உலகின் அன்பு கண்டேன் -அதை
என்றும் நெஞ்சினில் வெய்த்திடுவேன்
என்னுயிர் நீயானால் -என்றும

இனிதே வாழ்ந்திட வாழ்த்திடுவேன் -(உலகின்)

(1)

ஒற்றுமை ஓங்கிடவே - இந்த
மாந்தர்கள் ஒன்றாய் வாழ்வதற்கே
இசைப்பாய் பூமகளே -இங்கு
இன்பம் பெருகிட இசைத்திடுவாய் -(உலகின்)

(2)

தீமைகள் நெருங்கிடினும் - சிவ
சக்தியின் உருவாய் வந்தருள்வாய்
மாசறு மன மருள்வாய்
இங்கு மனதினில் சுகம் தர நீ வருவாய்
குறைவற்ற மதி யருள்வாய்-நீ
மகிழ்ந்தே அன்பாய் அருளிடுவாய் -(உலகின்)

இந்தப் பாடலை ஒவ்வொரு வரியாக வித்யரூபிணி பாட அனைவரும் பின் பாடினர். இவ்வாறு பாடி முடித்த பிறகு, வித்யரூபிணி அங்கிருக்கும் குழந்தைகளுக்கு பாட நூல்களை வழங்கினாள். இறுதியாக நன்றி கூறி விட்டு வித்யரூபிணி அவளது பெற்றோருடன் வீடு திரும்பினாள்.

அந்த ஆண்டிற்கான பத்மா விருதுகள் அறிவிக்கப்பட்டது. ஆனால், இம்முறை வித்யரூபிணிக்கு பத்மஸ்ரீ விருது கிடைக்கவில்லை. பத்மஸ்ரீ விருது தமக்கு கிடைக்க வேண்டும் என்று மிகுந்த ஆவலுடன் இருந்த வித்யரூபிணி சற்றுக் கவலைக் கொண்டாள். அவளது, பெற்றோர் அவளை சமாதானம் செய்தனர். அதன் பிறகு, வித்யரூபிணி சற்று சமாதானம் ஆனாள். இருப்பினும்,

வித்யரூபிணிக்கு பத்மஸ்ரீ விருது பெறவேண்டும் என்ற ஆர்வம் சற்றும் குறையவில்லை. எனவே, அவள் இதுவரை பத்மஸ்ரீ விருது யாருக்கெல்லாம் கிடைக்கப் பெற்றிருக்கிறது என்று இணையத்தில் ஆய்வு செய்யத் துவங்கினாள். கடந்த ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்ற அனைவரையும் பற்றி வித்யரூபிணி தெரிந்துக் கொண்டாள். இதனை அடுத்து வித்யரூபிணி அடுத்த ஆண்டில் நாம் நிச்சயமாக பத்மஸ்ரீ விருது பெறவேண்டும் என்று உறுதி பூண்டாள். இன்னும் சரியாக ஒரு மாதத்தில், வித்யரூபிணி புத்தக வெளியீட்டு நிறுவனம் ஆரம்பித்து ஒரு வருடம் நிறைவடைகிறது. இந்த முதல் வருடத்தை நாம் சிறப்பாக கொண்டாடலாம் என்று வித்யரூபிணி நினைத்தாள்.

வித்யரூபிணி இந்த ஓராண்டில் தான் கடந்து வந்த பாதையை நினைவுக் கூர்ந்தாள். ஆரம்பத்தில் சற்று தடங்கல்கள் இருந்திருந்தாலும், அதன் பின் தான் தொடர்ந்து வெற்றிப் பெற்றதை நினைத்து வித்யரூபிணி பெருமிதம் கொண்டாள். வித்யரூபிணி இந்த ஓராண்டில் நிகழ்ந்தவற்றை ஒரு காணொளியாக தயாரித்தாள். இந்த காணொளியின் இறுதியில் தமக்கு இந்த நாள் வரை ஆதரவு தந்துக் கொண்டிருப்பவர்களுக்கு நன்றியும் தெரிவித்திருந்தாள். இந்தக் காணொளியை வித்யரூபிணி முதலில் தன்னுடைய பெற்றோரிடம் காண்பித்தாள். இந்த காணொளியை பார்த்த செந்தில்குமரன் மற்றும் கனிஷ்கா வித்யரூபிணியைப் பாராட்டினர். இதன் பிறகு, வித்யரூபிணி தன் பெற்றோரிடம் இந்த முதலாம் ஆண்டு விழாவை தான் விமர்சையாக கொண்டாட இருப்பதாக கூறினாள். இதற்கு வித்யரூபிணியின் பெற்றோரும் சம்மதித்தனர். இதனை அடுத்து முதலாம் ஆண்டு விழா பற்றி தன்னோடு நிறுவனத்தில் பணிபுரிபவர்களுக்கும், மற்றும் தன்னுடைய மென்பொருள் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்கும் வித்யரூபிணி தெரியப்படுத்தினாள். இதனையடுத்து, வித்யரூபிணி, முதலாம் ஆண்டு விழா நினைவாக தன்னுடைய நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு பரிசுக் கொடுக்கலாம் என்று நினைத்தாள். முதலாம் ஆண்டு விழா நாள் வந்தது. வித்யரூபிணியின் பெற்றோர் உறவினர்கள், நண்பர்கள், மற்றும் வித்யரூபிணியின் மென்பொருள் பயிற்சி நிறுவனத்தில் பயிலும்

சில மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு, முதலாம் ஆண்டு விழா நல்லபடியாக நடந்தது. விழாவிற்கு வந்திருக்கும் மாணவர்களுக்கு பரிசினை அன்றைக்கே கொடுத்தாள் வித்யரூபிணி. மற்ற மாணவர்களுக்கு தபால் மூலம் பரிசினை அனுப்பி வைத்தாள். விழாவின் இறுதியாக வித்யரூபிணி தன்னுடைய ஓராண்டில் நடந்தவற்றை ஒரு புத்தகமாக வெளியிட்டாள்.

வித்யரூபிணி வெளியிட்ட புத்தகத்தில் அவள் கடந்து வந்த பாதைப் பற்றி குறிப்பிட்டிருந்தாள். இந்த புத்தகம் படிப்போருக்கு ஒருவித உத்வேகத்தை கொடுத்தது. இந்த புத்தகத்தைப் படித்த பல மாணவர்கள், வித்யரூபிணியைத் தொடர்பு கொண்டு, அந்தப் புத்தகத்தினைப் பற்றி கூறினர். அந்த புத்தகம் தங்களுக்கு ஒரு உத்வேகத்தை கொடுக்கிறது என்று கூறினர். இவ்வாறு இந்த புத்தகத்தினை படித்த பலரும் வித்யரூபிணியைத் தொடர்புக் கொண்டு பாராட்டினர். இந்த புத்தகம் வித்யரூபிணியின் வாழ்க்கையில் பெரியதொரு மாற்றத்தை கொடுத்தது. இந்த புத்தகத்தை வெளியிட்ட பிறகு, பல கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், வித்யரூபிணியை ஊக்கமூட்டும் பேச்சாளராக அழைத்தனர். இதன் பிறகு, வித்யரூபிணி கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் ஊக்கமூட்டும் பேச்சாளராக பேசத் துவங்கினாள்.

இவ்வாறு வித்யரூபிணியும் அவளது நிறுவனங்களும் படிப்படியாக பிரபலமாகின. இதனால் வித்யரூபிணிக்கு தன் மீது இருந்த நம்பிக்கை மேலும் அதிகமாகியது. இவ்வாறு சென்று கொண்டிருந்த போது, மகளிர் தினத்தையொட்டி, மகளிர் இயக்கத்தில் இருந்து ஒரு விருது வழங்கும் விழா நடைபெறவிருந்தது. இந்த விழாவிற்கான பரிந்துரைகள் வரவேற்கப்பட்டது. பல்வேறு பிரிவுகளில் விருதுகளை வழங்குவதற்கு அந்த நிறுவனம் முடிவு செய்திருந்தது. உதாரணத்திற்கு, பெண் தொழிலதிபர், வாழ்நாள் சாதனையாளர் என பல்வேறு விருதுகளை அந்த நிறுவனம் வழங்குவதாக முடிவு செய்தது.

வித்யரூபிணியின் புத்தக வெளியீட்டு நிறுவனத்தில் பணிபுரியும் அவளது தோழி வித்யரூபிணிக்கு தெரியாமல், பெண் தொழிலதிபர் என்ற பிரிவினில் வித்யரூபிணியை பரிந்துரைச் செய்தாள். இதனையடுத்து, அந்த நிறுவனத்தில் இருந்து வித்யரூபிணிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர், வித்யரூபிணியிடம் தாங்கள் பெண் தொழிலதிபர் என்ற பிரிவினில் பரிந்துரைக்கப் பட்டிருக்கிறீர்கள் என்றும் உங்கள் தொழில் பற்றி விரிவாக கூறுமாறும் கூறினர். வித்யரூபிணியும் தான் செய்யும் தொழில் பற்றி கூறினாள். இதனை அடுத்து விருது வழங்குவதற்கு முன் உறுதி செய்வதற்கு முக்கிய ஆவணங்களை அனுப்புமாறு அவர் கூறினார். வித்யரூபிணியும் அவர் கொடுத்த மின்னஞ்சல் முகவரிக்கு ஆவணங்களை அனுப்பினாள். வித்யரூபிணிக்கு இந்த விருது தனக்கு கிடைக்கும் என்று எந்த வித எதிர்பார்ப்பும் இல்லை. வித்யரூபிணி அவளது வேலையில் தொடர்ந்து செயல்பட்டாள். ஆனால், வித்யரூபிணிக்கு தன்னை இந்த விருதுக்கு யார் பரிந்துரைத்திருப்பார்கள் என்ற கேள்வி இருந்துக் கொண்டே இருந்தது. வித்யரூபிணி இது பற்றி யாரிடமும் எதுவும் கூறவில்லை. வித்யரூபிணி தன்னிடம் பயிலும் மாணவர்களுக்கு கற்பிப்பதில் எந்த வித குறைகளும் இருக்க கூடாது, தான் பயிற்றுவிக்கும் மாணவர்கள் அனைவரும் அவர்களது படிப்பு முடிந்ததும் ஒரு நல்ல நிறுவனத்தில் வேலையிலோ அல்லது சொந்த தொழிலோ செய்ய வேண்டும் என்பதில் வித்யரூபிணி உறுதியாக இருந்தாள். எனவே, தன்னுடைய பயிற்சியில் எந்த குறைகளும் இல்லாதவாறு அவள் தன்னுடைய பணிகளைச் செய்துக் கொண்டிருந்தாள். எனவே, தன்னுடைய புத்தகங்களின் தரத்தை அவ்வப்போது வித்யரூபிணி உறுதி செய்து கொண்டிருந்தாள். அவ்வப்போது, தன்னுடைய புத்தகங்களை அவளே ஆய்வு செய்து தேவைப்படும் புத்தகங்களுக்கு அடுத்த பதிப்பினை வெளியிட்டு கொண்டிருந்தாள்.

இதற்கிடையில் அந்த மகளிர் அமைப்பு நிறுவனத்தில் இருந்து, வித்யரூபிணிக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. அந்த மின்னஞ்சலில் வித்யரூபிணிக்கு அந்த ஆண்டின் சிறந்த பெண் தொழிலதிபர் என்ற

விருது அளிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதை அடுத்து வித்யரூபிணி அந்த நிறுவனத்தை தொலைபேசியில் தொடர்புக் கொண்டு விருது பெறுவதை உறுதி செய்து கொண்டாள். தனக்கு இவ்வாறு பெண்கள் அமைப்பு நிறுவனத்தில் இருந்து, பெண்கள் தினத்தையொட்டி "சிறந்த பெண் தொழிலதிபர்" என்ற விருதினை அளிப்பதாக அவர்கள் முடிவு செய்துள்ளார்கள் என்று தன் பெற்றோரிடம் வித்யரூபிணி கூறினாள். இதைக் கேட்ட வித்யரூபிணியின் பெற்றோர், ஆச்சர்யத்துடன் தங்கள் மகளை எண்ணிப் பெருமை கொண்டனர்.

இதன் பிறகு, வித்யரூபிணி அவளது பெற்றோர்களுடன் பெண்கள் தினத்தன்று அந்த விருது வழங்கும் விழாவிற்கு சென்றதும், அந்த விழாவின் ஒருங்கிணைப்பாளரைச் சந்தித்து, தன்னைப் பற்றிய விவரங்களைக் கூறி, பதிவுச் செய்துக் கொண்டாள். விருது வழங்கும் விழாத் துவங்கியது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கடந்த வருடம் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பெண்மணி வந்திருந்தார். இவரே இந்த வருடம் அனைவருக்கும் விருதுகளை வழங்கினார். பல்வேறு துறைகளில் சாதித்தப் பெண்களுக்கு விருதுகள் அளிக்கப்பட்டது. அடுத்ததாக வித்யரூபிணிக்கு விருது அளிக்கப்பட்டது. வித்யரூபிணி தன்னுடைய பெற்றோர்களோடு சேர்ந்து அந்த விருதினை பெற்றுக்கொண்டாள். ஒவ்வொருவருக்கும் விருது அளிக்கப்படும் பொழுது, தொகுப்பாளர் விருது பெறுபவரைப் பற்றி கூறிக்கொண்டு வந்தார். அவ்வாறு வித்யரூபிணி விருது பெரும் பொழுது, வித்யரூபிணியின் பல்வேறு திறமைகளைப் பற்றித் தொகுப்பாளர் கூறினார். அதில் வித்யரூபிணியின் இசை ஆர்வம் பற்றியும், நினைத்த மாத்திரத்தில் தானாகவே இசை அமைத்து பாடல் பாடும் திறமையும் குறிப்பிடப்பட்டது. இதனைக் கேட்ட பிறகு, விருது வழங்குபவர் வித்யரூபிணியை இந்த நிகழ்ச்சியைப் பற்றித் தங்களது கருத்தினைப் பாடலாக பாடுமாறுக் கேட்டுக் கொண்டார். வித்யரூபிணி பாடத் துவங்கினாள்.

பெண்ணின் பெருமையை உலகம் போற்றவே
வழிகள் திறந்திட விருதும் பெற்றிட
பேரும் புகழும் பெருமைச் சேர
அடித்தளம் இதுவே ஒன்றிரண்டாய்
உலகம் போற்ற - வழித்தடம் அமைப்பாய்
அங்கீகாரம் தேடித் தேடி ஏங்கும் மனம் மகிழ. -(பெண்ணின்)

(1)

உனது தியாகத்தில் குடும்பம் வளர்ந்திட
நீயும் மகிழ்ந்திருப்பாய்
புகழ் அடைந்திட எமது முயற்சியை
போற்றி விருதும் தந்தாய்
விருதும் கொடுத்து தான் எமது பொறுப்பினை
ஏற்றம் அடையச் செய்தாய்
எனது புழகினை உலகம் அறிந்திட
பெருமிதமும் கொன்டேன்
நான் வெற்றி பெற பாதைத் தன்னையே நீயும் அமைத்து தந்தாய்
என்றும் எந்தன் வெற்றி இங்கு உந்தன் பேரை சொல்லும்
நெஞ்சார்ந்த நன்றி கூறி மகிழ்வேன் - (பெண்ணின்)

வழக்கம் போல் இந்தப் பாடலைப் பாடிய பிறகு, அங்கிருந்த அனைவரும் வித்யரூபிணியின் இசைத் திறமை, மற்றும் கற்பனை வளத்திற்குத் தலை வணங்கினர். மேலும், விருது வழங்குபவர், இந்த விருதிற்கு சிறந்த திறமையாளரை தேர்ந்தெடுத்திருப்பதாக விருதளிக்கும் அந்த நிறுவனத்தைப் பாராட்டினார். விருது வழங்கும்

விழா தேசிய கீதத்துடன் இனிதே நிறைவடைந்தது. நிகழ்ச்சி நிறைவடைந்ததும் விருது வழங்கியவர் வித்யரூபிணியிடம் ஒரு வேண்டுகோளை வைத்தார். அந்த வேண்டுகோள் என்னவென்றால், அவரது மகள் கேன்சரால் பாதிக்கப்பட்டு மீண்டு வந்த பெண்களைப் பற்றி ஒரு ஆல்பம் பண்ணுவதாக இருக்கிறாள். அந்த ஆல்பத்திற்கு வித்யரூபிணி பாடல் எழுதி பாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பாடுவதில் எப்பொழுதும் ஆர்வமுடன் இருக்கும் வித்யரூபிணி, அவர் கேட்டவுடன் இதற்குச் சம்மதித்தாள்.

இதனையடுத்து வித்யரூபிணியின் பிறந்த நாள் வந்தது. வித்யரூபிணியின் இந்த பிறந்த நாளை அலுவலகத்தில் கொண்டாடலாம் என்று வித்யரூபிணியுடன் பணிபுரிபவர்கள் முடிவு செய்தனர். வித்யரூபிணிக்கு இது 23-வது பிறந்த நாள். வித்யரூபிணி பாரம்பரிய அலங்காரத்தை விரும்புபவள். எனவே, வித்யரூபிணி அவளது பிறந்த நாளன்று, தனக்கு பிடித்தவாறு அலங்காரம் செய்துக் கொண்டாள். அதன் பிறகு, வித்யரூபிணி அவளது பெற்றோரிடம் ஆசிர்வாதம் பெற்று கொண்டாள். ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு, வித்யரூபிணி கோவிலுக்குச் சென்றாள். கோவிலுக்குச் சென்ற போது, வித்யரூபிணி அங்கு ஒரு பெண்மணியைச் சந்தித்தாள். அந்த பெண்மணி வேறு யாருமில்லை. கடந்த வருடம் வித்யரூபிணி கோவிலுக்கு கலங்கிய மனதுடன் வந்த பொழுது, வித்யரூபிணியை ஏதேனும் ஒரு தெய்வீக பாடலைப் பாடுமாறுச் சொன்ன பெண்மணி தான் அன்றும் வந்திருந்தார். அவரைப் பார்த்த வித்யரூபிணி, நீங்கள் அன்று கூறியபடி நான் அம்மன் முன்பு ஒரு பாடலைப் பாடினேன். அதன் பிறகு, என் வாழ்வில் ஒரு முன்னேற்றம் வந்துள்ளது, என்று கூறினாள். இதனைக் கேட்ட அந்த பெண்மணி வித்யரூபிணியை வாழ்த்தினார். மேலும், வித்யரூபிணி அவரிடம் இன்று தனக்கு பிறந்த நாள் என்றும், நீங்கள் என்னை ஆசிர்வாதம் செய்யவேண்டும் என்றும் கூறினார். அந்த பெண்மணியும் வித்யரூபிணியை ஆசிர்வதித்தார். பின்பு, வித்யரூபிணி அலுவலகத்திற்கு வந்தாள். அலுவலகத்தில் வித்யரூபிணியுடன் பணிபுரிபவர்கள் அவளது பிறந்த நாளை கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தனர். அன்று

வித்யரூபிணியின் பிறந்த நாளை அனைவருமாக சேர்ந்து கொண்டாடினர்.

இந்த பிறந்த நாளன்று கோவிலுக்கு சென்றிருந்த போது, வித்யரூபிணி தனது பிறந்த நாள் வேண்டுதலாக அம்மனிடம் தனது அடுத்த வருட பிறந்த நாளன்று தான் இந்த கோவிலுக்கு வரும் பொழுது, பத்மஸ்ரீ. வித்யரூபிணியாக வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். இதனை அடுத்து, வித்யரூபிணி தனது வெற்றியில் ஒரு பங்கு தான் தனது சமூகத்திற்காக செய்த ஒரு பங்களிப்பாக இருக்க வேண்டும் என்று நினைத்தாள். இதனை அடுத்து, தன் சமூகத்தில் இருக்கும் அனைவருக்கும் உதவுமாறு ஒன்றை செய்யவேண்டும் என்று வித்யரூபிணி முடிவெடுத்தாள். இதைப் பற்றி யோசித்து கொண்டிருந்தப் பொழுது, வித்யரூபிணி, இந்த சமூகத்தில் பெண்களுக்கான பாதுகாப்பு மிகவும் குறைவாகவே இருப்பதை உணர்ந்தாள். பெண்களின் பாதுகாப்பினைப் பொருட்டு ஏதேனும் மென்பொருள் தயாரிக்க வேண்டும் என்று முடிவு செய்தாள். எனவே, வித்யரூபிணி இது குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டாள். இறுதியாக, இந்த ஆய்வின் முடிவுகளை ஒரு தொகுப்பாக எடுத்தாள். இந்த தொகுப்பினை மீண்டும் ஒரு முறை நன்கு ஆராய்ந்து, தான் செய்யவிருக்கும் மென்பொருளைப் பற்றி ஒரு முடிவிற்கு வந்தாள் வித்யரூபிணி. வித்யரூபிணி தான் தயாரிக்கும் மென்பொருள் பள்ளிக்குச் செல்லும் பெண் குழந்தைகள் முதல் பல பெண்களுக்கும் பெரிதும் பயன்பட வேண்டும் என்று நினைத்தாள். இதனால், வித்யரூபிணிக்கு வெறும் மென்பொருளாக தயாரித்தால், அது பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு பயன்படுமா என்ற சந்தேகம் எழுந்தது. ஏனென்றால், மென்பொருளைப் பயன்படுத்த ஒரு மடிக்கணினியோ அல்லது கைப்பேசியோ வேண்டும். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளால் எல்லா நேரத்திலும், மடிக்கணினியையோ அல்லது கைப்பேசியையோ வைத்திருக்கலாகாது. எனவே, தன்னுடைய முயற்சியால் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு எந்த வித பயனும் இருக்காது என்று தீர்மானித்தாள். தன்னுடைய முயற்சி அனைத்துப் பெண்களுக்கும்

தங்கள் பாதுகாப்பினைப் பற்றிய ஒரு தைரியத்தைக் கொடுக்க வேண்டும் என்பதில் வித்யரூபிணி மிகவும் உறுதியாக இருந்தாள். எனவே, நேரடியாக ஒரு மென்பொருளை உருவாக்காமல், மென்பொருளால் இயங்கும் ஒரு கருவியை உருவாக்கி அதன் மூலம் பெண்களுக்கான பாதுகாப்பினை அதிகரிக்க வேண்டும் என்று வித்யரூபிணி எண்ணினாள். மேலும், அந்த கருவியானது எல்லோராலும் எல்லா இடங்களுக்கும் எடுத்துச் செல்லும் வகையில் இருக்க வேண்டும் என்பதையும் வித்யரூபிணி முடிவு செய்தாள். ஆனால், மென்பொருளினை மட்டுமே பற்றித் தெரிந்த வித்யரூபிணிக்கு, மென்பொருளை வைத்து இயங்குகின்ற கருவியை எவ்வாறு தயாரிப்பது என்பது தெரியவில்லை. எனவே, வித்யரூபிணி மென்பொருளால் இயங்குகின்ற கருவியினை எவ்வாறு தயாரிப்பது என்பதைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டாள் வித்யரூபிணி. இது குறித்து, இணையத்தின் வாயிலாக வித்யரூபிணி பல தகவல்களை அறிந்து கொண்டாள். இருப்பினும், வித்யரூபிணிக்கு இந்த தொழில்நுட்பத்தை முழுமையாக புரிந்துக் கொள்வதற்கு சற்று கடினமாகவே இருந்தது. இதனால், இந்த தொழில்நுட்பத்தைப் பற்றி நன்கு அறிந்தவர், யாரேனும் தனக்கு வழிகாட்டினால் இதனைப் பற்றி மேலும் நன்கு அறிந்துக் கொள்ளமுடியும் என்று வித்யரூபிணி எண்ணினாள். இதனால், இந்த தொழில்நுட்பத்தைப் பற்றித் தன்னுடைய கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது என்று வித்யரூபிணி நினைத்தாள். அவர்கள் யாரேனும் தனக்கு உதவினால், தன்னால் இந்த தொழில்நுட்பத்தைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள முடியும் என்று முழுமையாக நம்பினாள். இதனை அடுத்து, வித்யரூபிணி மீண்டும் ஒரு நாள் தனது கல்லூரிக்குச் சென்றாள். கல்லூரியில் தன்னுடைய ஆசிரியர்கள், தற்பொழுது பயிலும் மாணவர்கள் என எல்லோரிடமும் பேசிய பிறகு, வித்யரூபிணி தன்னுடைய நோக்கத்தை பற்றி ஒரு ஆசிரியையிடம் கூறினாள். இதனைக் கேட்ட அந்த ஆசிரியை வித்யரூபிணியை முதலில் பாராட்டினார். இருப்பினும், அந்த ஆசிரியை வித்யரூபிணி இந்த துறையில் டாக்ட்ரேட் பட்டம்

பெற்றால், இது பற்றி நீ மேலும் தெரிந்துக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறினார். இது பற்றி வித்யரூபிணி யோசித்த போது, வித்யரூபிணிக்கு, தற்பொழுது இருக்கும் சூழலில், தாம் டாக்ட்ரேட் படிப்பு படிக்கத் துவங்கினால், தன்னுடைய நிறுவனத்தை சரியாக பார்த்துக்கொள்ள முடியாது என்று எண்ணினாள். எனவே, கல்லூரியில் இருந்து வீடு திரும்பியதும், மீண்டும் தனது ஆய்வினை வித்யரூபிணி தொடர்ந்தாள். இதுவரை, இந்த தொழில்நுட்பத்தில் வந்திருக்கும் படைப்புகளை வித்யரூபிணி எடுத்துப் பார்த்தாள். அலுவலகங்கள், வீடுகள் என பல்வேறு இடத்திலும் இன்று பெரும் அளவில் பயன்படுத்தும் கண்காணிப்பு கேமரா இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திதான் உருவாக்கி இருக்கிறார்கள் என்று வித்யரூபிணி அறிந்துக் கொண்டாள். எனவே, கண்காணிப்பு கேமராவை பொருத்தும் இயக்குனர்களிடம் கேட்டால் இது பற்றி தான் மேலும் அறிந்து கொள்ளலாம் என்று வித்யரூபிணி நினைத்தாள். இதனை அடுத்து, வித்யரூபிணி ஒரு கண்காணிப்பு கேமரா நிறுவனத்திற்கு சென்று, இது பற்றி அங்கிருந்த இயக்குனரிடம் கூறினாள். ஆனால், அவர் இது பற்றி எந்த விஷயத்தையும் கூறவில்லை. மேலும், வித்யரூபிணியை உதாசீனமாகவும் பேசினார். இதனை அடுத்து, அங்கிருந்து வீடு திரும்பிய வித்யரூபிணி ஒரு தீர்க்கமான முடிவினை எடுத்தாள். இனிமேல், இது பற்றி நாம் யாரிடமும் எந்த வித உதவியும் கேட்கக்கூடாது. நம்மால் முடிந்த வரை இது பற்றி தானாகவே அறிந்துக் கொண்டு, அதன் பிறகு இந்த கருவியினை நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்று உறுதியாக ஒரு முடிவிற்கு வந்தாள். இதன் பிறகு, வித்யரூபிணி மேலும் தீவிரமாக அவளது ஆய்வினைத் தொடர்ந்தாள். இந்த ஆய்வுகள் ஒன்றரை மாதங்களுக்கு தொடர்ந்தது. ஆய்வுகள் நிறைவடைந்த பிறகு வித்யரூபிணி ஆய்வுகளின் முடிவுகளை ஒரு தொகுப்பாக தயாரித்தாள்.

இந்த தொகுப்புகளை வித்யரூபிணி மீண்டும் ஒரு முறை நன்கு ஆராய்ந்து, தான் என்ன செய்யவேண்டும் என்பதை தெளிவுபடுத்திக் கொண்டாள். இதன் பிறகு, தான் செய்ய நினைத்த கருவியின்

இயக்கத்திற்கான வரைபடத்தை வரைந்தாள். இந்த வரைபடத்தில், இந்த கருவியின் இயக்கத்தை தெளிவாக குறிப்பிட்டிருந்தாள். வரைபடத்தில், இந்த கருவியானது ஒரு சிறிய காந்தத்தின் அளவில், ஒட்டும் தன்மையுடன் இருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருந்தாள் வித்யரூபிணி. அந்த கருவியானது ஒட்டும் தன்மையுடன் இருந்தால் தான், அனைத்து பெண்களாலும் அதனைப் பயன்படுத்த முடியும் என்று நினைத்தாள் வித்யரூபிணி.

உதாரணமாக, பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள், தங்களது அடையாள அட்டையின் பின்பக்கத்தில் இந்த கருவியினை வைத்துக்கொள்ளலாம். இந்த கருவியை வடிவமைக்கும் பொழுது, வித்யரூபிணி ஒரு விஷயத்தில் உறுதியாக இருந்தாள். நாம் செய்கின்ற கருவியை பயன்படுத்துபவர்கள், பெண்கள் தான். அதிலும் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் தான் இந்த கருவியைப் பெரும் அளவில் பயன்படுத்துவார்கள். எனவே, தன்னுடைய கருவியில் இருந்து வெளிவரும், அலைவரிசை அதனை பயன்படுத்துவோரின் உடல்நலத்தைப் பாதிக்கக் கூடாது என்பதில் வித்யரூபிணி தெளிவாக இருந்தாள். எனவே, வித்யரூபிணி அந்தக் கருவியின் அலைவரிசையை அவ்வப்போது கண்காணிக்கும் வகையில் ஒரு சென்சாரை அந்த கருவியினுள் வைத்திருந்தாள். இந்த சென்சார் அந்த கருவியின் அலைவரிசை அதிகமாக இருக்கும் நேரத்தில் ஒரு ஒலியினை எழுப்பும். இதனை அடுத்து, அந்த கருவியைப் பயன்படுத்துபவர்கள் அதனை அனைத்து வைத்துக்கொள்ளலாம். மீண்டும் சற்று நேரம் கழித்து, அந்த கருவியை இயக்கலாம். இவ்வாறாக அந்த கருவியின் வடிவமைப்பை வித்யரூபிணி முடிவு செய்தாள். இதனை அடுத்து அந்த கருவியை இயக்குவதற்கான மென்பொருளின் வழிமுறைகளை எளிதான முறையில் எழுதினாள். இந்த வழிமுறையில் மென்பொருளின் இயக்கத்தை வித்யரூபிணி தெளிவாக குறிப்பிட்டிருந்தாள்.

உதாரணத்திற்கு, அந்த கருவி இக்கட்டான சூழலில், எவ்வாறு இயங்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த கருவியானது, அதனை வைத்திருப்பவரின் இதய துடிப்பை கண்காணித்து

கொண்டிருக்கும். இதய துடிப்பில் ஏதேனும் ஒரு மாற்றம் அல்லது சராசரி துடிப்பிற்கும் அதிகமாக இருந்தால், ஒரு எச்சரிக்கை அறிவிப்பினை அந்தக் கருவியை வைத்திருப்பவரின் தொலைபேசி எண்ணிற்கு அனுப்பும். அந்த அறிவிப்பிற்கு எந்த வித பதிலும் இல்லாத பொழுது, அந்த கருவியைப் பயன்படுத்துபவரின் உறவினர்களுக்கும் அந்த அறிவிப்பினைத் தெரியப்படுத்தும். அந்த கருவியை வைத்திருப்பவர், ஏதேனும் பதட்டத்திலோ அல்லது ஓட்டத்திலோ இருந்தால், அந்த கருவியில் இருந்து, தற்பொழுது இருக்கும் இடத்தின் வரைப்படத்துடன் அருகில் இருக்கும் காவல் நிலையத்திற்குச் செய்தி அனுப்பப்டும். எனவே, இந்த கருவியானது ஒரு தொலைபேசி எண்ணுடனும் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். இறுதியாக, அந்தக் கருவியின் அடிப்பாகத்தில் ஒரு கூர்மையான சிறிய கத்தி போன்ற ஒன்றும் பொருத்தப்பட்டிருந்தது. அபாய கரமான சூழ்நிலையில் இந்த கருவியை வைத்திருப்பவர்கள், எதிரில் உள்ளவர்களை தாக்கவும் ஏதுவான முறையில் இக்கருவி வடிவமைக்கப் பட்டிருந்தது.

இதனை அடுத்து, வித்யரூபிணி இந்த கருவியைச் செய்வதற்குத் துவங்கினாள். கருவியைச் செய்யத் துவங்கும் முன்பு, கருவியின் வரைபடத்தையும், அதை இயக்கவிருக்கும் மென்பொருளின் வழிமுறையையும் வித்யரூபிணி எடுத்து வைத்துக்கொண்டாள். இந்தக் கருவியை முதல் முறை ஒரு நுண்செயலி கிட் போன்று வித்யரூபிணி செய்யத் துவங்கினாள். இந்தக் கருவியை வடிவமைக்கும் பொழுது, வித்யரூபிணிக்கு பல்வேறு கேள்விகளும் சோதனைகளும் வந்தது. அவளது கேள்விகள் அனைத்திற்கும் கூகுள் பதிலினை கொடுத்தது. அவளுக்கு வந்த சோதனைகள் யாவும் வித்யரூபிணிக்கு அசைக்க முடியாத நம்பிக்கையையும், தைரியத்தையும் கொடுத்தது. இதனால், வித்யரூபிணி மூன்று மாதங்களில் அந்த கருவியை மட்டும் செய்து முடித்தாள். இந்தக் கருவியை இயக்கும் மென்பொருளினை வித்யரூபிணி செய்யத் துவங்கினாள். மென்பொருளில் நன்கு திறமையும் அறிவும், கொண்டிருந்த வித்யரூபிணிக்கு இந்தக் கருவியை இயக்குவதற்கான

மென்பொருளை செய்வது பெரிய சவாலாக இல்லை. தனக்கு பிடித்ததை அடைவதற்கு நாம் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும், அதனை ஏற்றுக் கொள்வது போன்று, வித்யரூபிணி இந்த மென்பொருளினை உருவாக்கும் பொழுது, அவளுக்கு வந்த சவால்கள், சோதனைகள் அனைத்தையும் சிரித்த முகத்துடன், சமாளித்தாள். வித்யரூபிணி இறுதியாக மென்பொருளையும் தயாரித்து முடித்தாள். இறுதியாக, இந்தக் கருவியை மென்பொருளோடு இணைத்தாள். இணைத்த பிறகு, அந்த கருவியை பல்வேறு வகையில் சோதனை செய்து பார்த்தாள். வித்யரூபிணி, இறுதியாக அந்த கருவியின் இயக்கத்தில் திருப்தி அடைந்தாள். இந்தக் கருவியை முழுமையாக வடிவமைத்தபின், வித்யரூபிணி அதனை தன் பெற்றோர்களிடம் காண்பித்தாள். இதனைப், பார்த்த வித்யரூபிணியின் பெற்றோர் வித்யரூபிணியை எண்ணி ஈடில்லா மகிழ்ச்சி அடைந்தனர். தனது பெற்றோரிடம் காண்பித்த பிறகு, வித்யரூபிணி இதனை தன்னுடைய நிறுவனத்தில் பணிபுரிபவர்களிடம் காண்பித்தாள். அவர்களும், இதனைப் பார்த்து வித்யரூபிணியின் முயற்சியை பாராட்டினர். அவர்களிடம், வித்யரூபிணி இதில் ஏதேனும் மாறுதல்கள், புதுப்பிப்புகள் செய்யலாம் என்று உங்களுக்கு தோன்றினால், அதனைத் தன்னிடம் தெரிவிக்குமாறும் கூறினாள். அதற்கு அங்கு பணிபுரியும் ஒரு பெண், இது வரை யாரும் செய்யாத ஒரு புது முயற்சியாக தான் இந்த கிட் தெரிகிறது, என்று மேலும் வித்யரூபிணியை பாராட்டினார். இதற்கடுத்து, இந்த முயற்சியை அனைவருக்கும் கொண்டுச் சேர்க்க வேண்டும் என்று வித்யரூபிணி எண்ணினாள். இதனை அடுத்து, தன்னுடைய இந்த முயற்சியை வித்யரூபிணி அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தாள். நாம் தாமாக இதனை அரசாங்கத்திற்கு தெரிவித்தால், இதனை யாரும் பெரும் அளவில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று வித்யரூபிணிக்கு தோன்றியது. எனவே, தன்னுடைய கண்டுபிடிப்பை அனைவரும் பயன்படுத்துவதற்கு என்ன செய்வது என்று வித்யரூபிணி தீவிரமாக யோசித்தாள். இவ்வாறு யோசித்து கொண்டிருக்கும் பொழுது,

தொலைக்காட்சியில் பள்ளி மாணவர்களின் சாதனைகள் ஒளிபரப்பப் பட்டுக்கொண்டிருந்தது. இதனைப் பார்த்த வித்யரூபிணிக்கு, தான் கடந்த வருடம் ஒரு தொலைக்காட்சிக்கு கொடுத்த நேர்காணல் நினைவிற்கு வந்தது. தம்மை நேர்காணல் எடுத்தவரைத் தொடர்பு கொண்டால், தன்னுடைய இந்த முயற்சி பலரையும் போய் சேரும், என்று வித்யரூபிணி உறுதியாக நம்பினாள். எனவே, இரண்டு நாட்களுக்குப் பிறகு, தன்னை நேர்காணல் எடுத்தவரை வித்யரூபிணித் தொடர்புக் கொன்டு பேசினாள். அவரிடம், வித்யரூபிணி தன்னுடைய முயற்சி பற்றிக் கூறினாள். இது குறித்து தங்களின் தொலைக்காட்சியில் ஒளிபரப்புமாறும் வித்யரூபிணி கேட்டுக் கொண்டாள். இதனைக் கேட்ட அந்த பத்திரிகையாளர், வித்யரூபிணியிடம் தான் பணிபுரியும் பத்திரிக்கை நிறுவனத்தின் உரிமையாளரிடம் கேட்டு விட்டு சொல்வதாக கூறினார். இதனை அடுத்து, வித்யரூபிணி தன்னுடைய முயற்சி எப்படியும் அனைவருக்கும் பயன்பெற வேண்டும் என்று நினைத்தாள். இதற்கடுத்து, வித்யரூபிணி தன்னுடைய வேலையில் தொடர்ந்து செயல்பட்டாள். இரண்டு நாட்களுக்கு பிறகு, வித்யரூபிணியை அந்த பத்திரிக்கையாளர் தொடர்பு கொண்டு பேசினார். அவர் வித்யரூபிணியியை நேர்காணல் எடுப்பதற்கு சம்மதம் தெரிவித்தார். மேலும் அவர் வருகின்ற திங்கள் கிழமை வித்யரூபிணியை நேர்க்கானலுக்கு தயாராகுமாறும் தெரிவித்தார். இதனை அடுத்து, வித்யரூபிணியின் நேர்காணல் துவங்கியது. நேர்காணலில் வித்யரூபிணி தன்னுடையக் கருவியைப் பற்றித் தெளிவாக கூறினாள். இந்த கருவியின் பயன்பாடுகள், இந்தக் கருவியை உருவாக்குவதற்கு அவள் எடுத்து கொண்ட நேரம் என தன்னுடைய முயற்சியைப் பற்றி வித்யரூபிணி கூறினாள். நேர்காணலின் இறுதியாக வித்யரூபிணி தன்னுடைய கருவியைச் செயல்படுத்திக் காண்பித்தாள். இத்துடன் இந்த நேர்காணல் முடிவடைந்தது. நேர்காணல் முடிந்து, ஒரு வாரத்திற்கு பிறகு, அந்த நேர்காணல் அந்தத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப் பட்டது. இந்த நிகழ்ச்சியைப் பார்த்த பல பத்திரிக்கை நிறுவனங்கள் வித்யரூபிணியை தொடர்புக் கொண்டு, அவளை நேர்காணல் எடுத்தனர். இதனை அடுத்து, பல

தொலைக்காட்சிகளில் வித்யரூபிணியின் நேர்காணல் ஒளிபரப்பாகியது. இதனை அடுத்து, வித்யரூபிணியின் இந்த முயற்சி அரசாங்கத்தின் பார்வைக்குச் சென்றது. இந்த முயற்சி நிச்சயம் அங்கீகரிக்க படவேண்டியது என்று அரசாங்கத்தினர் முடிவு செய்தனர். இதனைத் தொடர்ந்து, ஆளுநர் மாளிகையில் இருந்து வித்யரூபிணிக்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் ஒரு பெண் வித்யரூபிணியிடம், ஆளுநர் நீங்கள் கண்டுபிடித்த கருவியைப் பற்றித் தங்களிடம் கலந்துரையாட வேண்டும் என்று கூறுவதாக தெரிவித்தார். வித்யரூபிணி தன்னுடைய பெற்றோரிடம் சம்மதம் கேட்டுவிட்டு வித்யரூபிணி ஆளுநரை பார்ப்பதற்கு ஆயத்தமாகினாள். வித்யரூபிணி, அவளது பெற்றோருடன் ஆளுநர் மாளிகைக்கு புறப்பட்டாள். ஆளுநரை சந்தித்து, தன்னுடைய முயற்சிப் பற்றி வித்யரூபிணி கூறினாள். வித்யரூபிணியின் பேச்சில் இருந்த தைரியத்தையும் தெளிவினையும் கண்டு ஆளுநர் வியந்து போனார். இதனை அடுத்து, வித்யரூபிணியிடம், ஆளுநர் தாங்கள் அரசாங்கத்திடமிருந்து என்ன உதவியினை எதிர்பார்க்கிறீர்கள் என்று வினவினார். வித்யரூபிணி, தன்னுடைய இந்த முயற்சி தன் நாட்டில் உள்ள அனைத்து பெண்களுக்கும் போய் சேர வேண்டும் என்று வித்யரூபிணி கூறினாள். இதற்கு ஆளுநர் தம்மால் இயன்ற உதவியை அரசாங்கம் நிச்சயமாக செய்யும் என்ற வாக்குறுதியினை வித்யரூபிணிக்கு கொடுத்தார். மேலும், உம்முடைய முயற்சி நிச்சயம் அங்கீகரிக்க படவேண்டியது என்றும் ஆளுநர் வித்யரூபிணியைப் பாராட்டினார். எனவே, இதற்கு ஆவண செய்வது எங்களது கடமை என்றும் ஆளுநர் கூறினார். ஆளுநரின் இந்தப் பாராட்டு வித்யரூபிணியைப் பெரிதும் மகிழ்ச்சி அடையச் செய்தது. இதை அடுத்து, ஆளுநர் மாளிகையில் நிகழ்ந்தவற்றை வித்யரூபிணி அவளுடைய பெற்றோரிடம் கூறினாள். இதனைக் கேட்ட வித்யரூபிணியின் பெற்றோர் வித்யரூபிணியை நினைத்து பெரிதும் பெருமிதம் கொண்டனர். இதன் பிறகு, வித்யரூபிணிக்கு ஆளுநர் மாளிகையில் இருந்து ஒரு தபால் வந்தது. அந்த தபாலில் வித்யரூபிணி வடிவமைத்த கருவியை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக உள்ளது என்றும், இந்த முயற்சியைப்

பாராட்டி வித்யரூபிணிக்கு 5 லட்சம் பரிசுத் தொகையும் வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்றும், இதற்கு நீங்கள் சம்மதித்தாள் இந்த தபாலில் கொடுக்கப் பட்டிருக்கும் முகவரிக்கு தங்களது கருத்தினை தெரியப்படுத்தவும் என்றும் குறிப்பிட பட்டிருந்தது. இதைப் படித்த வித்யரூபிணிக்கு ஆனந்தம் பெருகியது. இந்த மகிழிச்சியோடு இந்த விஷயத்தை தன்னுடைய பெற்றோரிடம் வித்யரூபிணி தெரிவித்தாள். இதனைக் கேட்ட வித்யரூபிணியின் பெற்றோருக்கு ஆனந்த கண்ணீர் பெருக்கெடுத்தது. தங்கள் மகளை எண்ணி அவர்கள் பெருமிதம் அடைந்தனர். இதனை அடுத்து, வித்யரூபிணி ஆளுநர் மாளிகைக்கு தம்முடைய சம்மதத்தைத் தெரிவித்தாள். இதனை அடுத்து, வித்யரூபிணியின் முயற்சியைப் பாராட்டி பரிசளிப்பதற்கு ஆளுநர் மாளிகையில் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை அடுத்து, அடுத்த மாதம் 22-ஆம் தேதி வித்யரூபிணியின் பாராட்டு விழா நடைபெறவிருந்தது. இதற்கிடையில் வித்யரூபிணி மற்றும் அவளது பெற்றோர்கள் அவளது பாராட்டு விழாவிற்கு ஆயத்தம் ஆகிக்கொண்டிருந்தனர். பாராட்டு விழா நடைபெறும் நாளும் வந்ததும். வித்யரூபிணி அவளுடைய பெற்றோருடன் பாராட்டு விழா நடக்கும் இடத்திற்கு வந்தாள். ஆனால், அங்கிருந்தவர்கள் வித்யரூபிணியை மட்டுமே உள்ளே வருவதற்கு அனுமதித்தனர். இதனை அடுத்து, வித்யரூபிணி ஆளுநரிடம் சென்று, தாம் இந்த பாராட்டு விழாவில் தம்முடைய பெற்றோருடன் கலந்துக் கொள்வதற்கு தாங்கள் எனக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். இதற்கு ஆளுநர் சம்மதித்ததை அடுத்து, வித்யரூபிணி அவளது பாராட்டு விழா நடைபெறும் இடத்திற்கு அவளது பெற்றோருடன் வந்தாள். பாராட்டு விழா இனிதே முடிவடைந்தது. வித்யரூபிணி வடிவமைத்த கருவி அரசாங்கத்தின் சார்பில் மக்களிடம் கொண்டுச் செல்லப்பட்டது. இதனை அடுத்து, ஒவ்வொரு ஊரில் இருக்கும் மக்களுக்கும் இந்தக் கருவி கொடுக்கப்பட்டு வந்தது. இதனால், பல பெண்களுக்கு தங்கள் பாதுகாப்பினைப் பற்றிய நம்பிக்கை அதிகரித்தது. பல பெண்கள் எந்த வித தயக்கமும் பயமும் இன்றி தங்கள் பணிகளுக்குச் சென்று வந்தனர். இதனை அடுத்து, ஒவ்வொரு ஊரில் இருக்கும் மக்களுக்கும்

இந்தக் கருவி கொடுக்கப்பட்டு வந்தது. வித்யரூபிணியின் இந்த முயற்சி பல கிராமங்களுக்கும் சென்றடைந்தது. இதனால், கிராமத்தில் இருக்கும் பல பெண்கள் பயனடைந்தனர். இதனால், கிராமத்தில், பள்ளிக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கையும் முன்பை விட அதிகமாகியது. இதற்கிடையில், இந்தக் கருவி வித்யரூபிணியின் ஊரில் உள்ள மக்களுக்கும் சென்றடைந்தது. இப்படி சென்று கொண்டிருக்கையில், ஒரு நாள் அந்த கருவி வித்யரூபிணியின் குடும்பத்திற்கும் வந்தது. தான் வடிவமைத்த கருவி தன்னுடைய குடும்பத்திற்கு வந்ததை எண்ணி, வித்யரூபிணியும் அவளது பெற்றோரும் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர். வித்யரூபிணி தன்னுடைய ஆசை நிறைவேறியதை எண்ணி பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள்.

இதனை அடுத்து, இந்த ஆண்டின் பத்மா விருதுகளுக்கான பரிந்துரைகள் வரவேற்கப்பட்டன. இதனை அறிந்த வித்யரூபிணி இந்த ஆண்டும் தன்னை தானே பத்மஸ்ரீ விருதிற்கு பரிந்துரை செய்தாள். ஆனால், இம்முறை வித்யரூபிணி தன்னை பத்மஸ்ரீ விருதிற்கு பரிந்துரைக்கும் முன்பு, அவள் அந்த விருதினை பெறுவதற்கு தனக்கு அனைத்து தகுதிகளும் உள்ளதா என்பதை முறையாக ஆய்வு செய்து கொண்டு, அதன் பின்னரே, விருதிற்கு தன்னை பரிந்துரைத்தாள். வித்யரூபிணி, தான் மென்பொருள் பயிற்சி நிறுவனம், மற்றும் புத்தக வெளியீட்டு நிறுவனம் ஆரம்பித்த இந்த ஒன்றரை வருடங்களில் தாம் அடைந்த வெற்றிகள் மற்றும் தோல்விகளை ஒரு தொகுப்பாக எடுத்து வைத்தாள். இந்த ஒன்றரை வருடங்களில் நிகழ்ந்தவற்றை நினைவு கூர்ந்து, அதன் பிறகு அவற்றை ஒரு அனுபவமாக எடுத்து கொண்டு அவளது வேலையைத் தொடர்ந்தாள். இந்தப் தொகுப்பினை பார்த்த பிறகு வித்யரூபிணி, தான் ஆசைப்பட்டது அனைத்தும் நிறைவேறியது. இன்னும் இதனுடன் வீணையும் நாம் வாசித்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணினாள். வித்யரூபிணிக்கு பல வருடங்களுக்கு பிறகு, வீணை வாசிக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. இது பற்றி வித்யரூபிணி தனது பெற்றோரிடம் கூறினாள். ஆனால், அவளது

பெற்றோர்கள் இதற்கு முழுமையாக சம்மதிக்கவில்லை. இதனால், வித்யரூபிணி இணையத்தை பார்த்து தாம் வீட்டில் இருந்தவாறே ஓரளவிற்கு வீணை வாசிப்பதற்கு கற்று கொள்வேன் என்று கூறினாள். இதற்கு வித்யரூபிணியின் பெற்றோரும் ஒரு விதமாக சம்மதித்தனர். இதனையடுத்து, வித்யரூபிணிக்கு ஒரு குழப்பம் எழுந்தது. இணையத்தைப் பார்த்து தம்மால் முழுமையாக வீணையைக் கற்றுக்கொள்ள முடியுமா என்று அவளுக்கு ஒரு தயக்கம் வந்தது. இதனால், அவள் தன்னுடைய பணத்தை வைத்து ஒரு நல்ல வீணை வாங்க வேண்டும் என்று எண்ணினாள். இதன் பிறகு, இணையதளம் மூலம் ஒரு பெரிய வீணை வாசிப்பவரிடம் முறையாக வீணை பயில்வதற்குத் துவங்கினாள். வீணை வாசிக்க கற்றுக் கொள்ளத் துவங்கி ஒரு மாதத்திற்கு பிறகு, வித்யரூபிணி வீணையை பற்றி ஓரளவிற்கு தெரிந்து கொண்டாள். இதனையடுத்து, வித்யரூபிணி தனது பெற்றோர்களுடன் தஞ்சாவூர் சென்று ஒரு வீணையை வாங்கினாள். இதனை அடுத்து, வாரத்தில் மூன்று நாட்கள் வீணை வாசிக்க கற்றுக் கொண்டாள். மற்ற நாட்களில் வித்யரூபிணி தன்னுடைய வேலையில் கவனம் செலுத்தினாள். இவ்வாறு ஆறு மாதங்களுக்கு தொடர்ந்து வித்யரூபிணி வீணை வாசிக்க கற்றுக் கொண்டாள். இதன் பிறகு, வித்யரூபிணி நன்றாக வீணை வாசிக்க ஆரம்பித்தாள். இதனை அடுத்து, வித்யரூபிணி அவள் சந்தோஷமாக இருக்கும் பொழுது, சோகத்தில் இருக்கும் பொழுது என அவ்வப்போது அவளுக்கு பிடித்த பாடல்கள், அவளுடைய பாடல்கள் என பல்வேறு இசைகளைத் தன்னுடைய வீணையில் மீட்டுவாள். இதன் பிறகு, வித்யரூபிணி தன்னுடைய மென்பொருள் பயிற்சி நிறுவனத்தில் இது வரை படிக்கும் மாணவர்களின் பட்டியலை எடுத்துப் பார்த்தாள். இது வரை தம் நிறுவனத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களில் தற்பொழுது வேலைவாய்ப்பு அல்லது சொந்த தொழில் அமைத்திருக்கும் மாணவர்களின் பட்டியலைத் தயாரித்தாள். இதன் பிறகு, வித்யரூபிணி கடந்த ஆண்டின் வேலைவாய்ப்பு சதவீதத்தை தயாரித்தாள். இம்முறை வித்யரூபிணியின் நிறுவனத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களில் 85 சதவீத மாணவர்கள் வேலைவாய்ப்பு

பெற்றிருந்தனர். இதனைக் கண்டு வித்யரூபிணி மகிழ்ச்சி அடைந்தாள். மேலும் இதனை 100 சதவீதமாக மாற்ற வேண்டும் என்றும் அவள் உறுதி கொண்டாள் .

இதனையடுத்து, வித்யரூபிணி தான் முன்பு எழுதிய தொழில் முனைவோர் திட்டத்திற்கான புத்தகத்தை ஆய்வு செய்து, அதனில் சில தலைப்புகளை புதுப்பித்து, அந்த புத்தகத்தின் இரண்டாம் பதிப்பினை வெளியிட்டாள். இதன் பிறகு, ஒவ்வொரு மாதமும் தனது இணையதளத்தில், காணொளி மூலம் வித்யரூபிணி தொழில் முனைவோர் திட்டத்திற்கான வழிகாட்டுதலை மாணவர்களுக்கு கொடுத்தாள். இதனால், மேலும் பல மாணவர்கள் வித்யரூபிணியின் இணையத்தளத்தின் இணைந்தார்கள். இதோடு மட்டும் இல்லாமல், வித்யரூபிணியை பற்றியும் அவளது நிறுவனங்கள் பற்றியும் பலருக்கும் தெரியவந்தது. நிறுவனம் துவங்கிய இரண்டு ஆண்டுகளில் வித்யரூபிணியின் வளர்ச்சி பன்மடங்காகியது. வித்யரூபிணியின் இந்த வளர்ச்சிக்கு காரணம், அவளது தன்னம்பிக்கை மற்றும் நேர்மையான முயற்சியுமே ஆகும். மேலும், பிற மென்பொருள் பயிற்சி நிறுவனங்கள் போல் இல்லாமல், வித்யரூபிணியின் பயிற்றுவிக்கும் முறை மாணவர்களைக் கவர்ந்தது. மென்பொருள் மீது பெரிதாக ஆர்வம் இல்லாமல் வெறும் சான்றிதழுக்காக மட்டும் பயிற்சி பெற வந்த மாணவர்களுக்கும் வித்யரூபிணியின் பயிற்றுவிக்கும் முறை மென்பொருள் மீதான ஆர்வத்தை தூண்டியது. இதனால், பல மாணவர்கள் வித்யரூபிணியின் மென்பொருள் பயிற்சி நிறுவனத்தில் இணைந்தார்கள். இதனை அடுத்து, தம்முடைய பயிற்சியினை மேலும் மேம்படுத்த வேண்டும் என்று எண்ணிய வித்யரூபிணி, தன்னிடம் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்திர மாதிரி நேர்முகத் தேர்வுகளை நடத்தினாள். இந்த மாதாந்திர நேர்முக தேர்வினை சரியாக செய்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக சில பரிசுகளை வழங்கினாள் வித்யரூபிணி. இந்த மாதிரி நேர்முக தேர்வு மாணவர்களுக்கு நேர்முக தேர்வினை எதிர்கொள்வதற்கான தைரியத்தை கொடுத்தது. இதனால் வித்யரூபிணி நிறுவனத்தின்

வேலைவாய்ப்பு சதவீதம் மேலும் உயர்ந்தது. இதற்கிடையில் வித்யரூபிணி பத்மா விருதுகளின் முடிவுக்காக காத்துக் கொண்டிருந்தாள். கடந்த வருடம் போன்று இல்லாமல் இந்த வருடம் தமக்கு பத்மஸ்ரீ விருது கிடைக்க வேண்டும் என்று வித்யரூபிணி விரும்பினாள். இந்த விருது மட்டும் தனக்கு கிடைத்தால் அது தனக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாக இருக்கும் என்று வித்யரூபிணி எண்ணினாள்.

இதற்கிடையில், மகளிர் அமைப்பு நிறுவனம் சார்பாக வித்யரூபிணிக்கு விருதளித்த அந்த பெண்மணி, அன்று கூறியது போல், ஒரு இசை ஆல்பத்திற்கு வித்யரூபிணியை பாடுவதற்காக தொடர்பு கொண்டு பேசினார். அவரது பெண் பலவித சோதனைகளை வாழ்வில் அடைந்து, பெரிய போராட்டத்துடன் மீண்டு வந்தவர்களுக்கான சமர்ப்பணமாக ஒரு ஆல்பத்தை தயாரித்தாள். இந்த ஆல்பத்திற்கான பாடலையே வித்யரூபிணியை பாடுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

நான் பாடும் கீதம் கேளுங்கள் -(2)

இது வரை காணாத புத்துணர்ச்சி

என் பாடல் கேட்டாலே புன்னகை பூப்பாய் -(நான்)

பாடுக என்னுடன் சேர்ந்து தன்னம்பிக் கையும் பிறக்கும் -(நான்)

(1)

ஒரு நாள் வாழும் பூக்களின் வாழ்வில்

சோகத்தை நீயும் கண்டது உண்டா -(நான்)

(2)

சோகத்தை நீயும் மறந்திடுவாய்

சாதிக்க தானே பிறந்து வந்தாய்

இதயத்தில் நம்பிக்கை என்றும் கொண்டு

வாழ்வில் ஜெயித்திட வாழ்த்துகிறேன் -(நான்)

இந்தப் பாடலை அந்த பெண் அமைத்த இசையில் வித்யரூபிணி எழுதி பாடினாள். இந்த பாடலை பாடியதற்கு அந்த பெண்ணும் அவரது தாயும் வித்யரூபிணிக்கு நன்றி கூறி கௌரவித்தனர். இதற்கடுத்து, இந்த ஆல்பம் சமூக ஊடகங்களில் பெரும் அளவில் பகிரப்பட்டது. இந்த பாடல் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஒரு உத்வேகத்தை கொடுத்தது. இந்த பாடல் கேட்போரின் மனதில் ஊடுருவியது. இந்த ஆல்பத்தை கேட்ட அனைவரும் இந்த ஆல்பத்தை பாராட்டினர். இதனால், இந்த ஆல்பத்தை தயாரித்த அந்த பெண் பெரும் அளவில் மகிழ்ச்சி அடைந்தாள். இவ்வாறு இந்த ஆல்பம் சமூக ஊடகங்களில் பரவலாக பரவப்பட்டு, ஒரு நாள் அது வித்யரூபிணியின் கண்ணிலும் பட்டது. இந்த ஆல்பம் வெளியாகி இரண்டே நாட்களில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஆல்பத்தினை பார்த்திருந்தனர். இதனை அறிந்த வித்யரூபிணி பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள். இந்த பாடலின் இசையை வேறொருவர் அமைத்திருந்தாலும், இந்த பாடலின் வரிகளை எழுதி அதனை தான் பாடியதில் வித்யரூபிணி பெருமிதம் கொண்டாள். அந்தச் சமயம், வித்யரூபிணி தாமும் இதே போல் ஒரு ஆல்பம் தயாரிக்கலாம் என்று எண்ணினாள். ஆனால், அச்சமயம் வித்யரூபிணிக்கு வேறொரு எண்ணம் எழுந்தது. இவ்வாறு தான் ஆல்பம் தயாரிக்க துவங்கினால், தன்னால் மென்பொருள் பயிற்சி நிறுவனம் மற்றும் புத்தக வெளியீட்டு நிறுவனத்தை முறையாக நடத்த இயலாமல் ஆகலாம் என்று அவள் நினைத்தாள். எனவே, இசை என்பது தனது வாழ்வில் ஒரு பொழுதுபோக்கு அம்சமாக எப்பொழுதும் இருக்கட்டும் என்று வித்யரூபிணி எண்ணினாள். இதனையடுத்து, வழக்கம் போல் வித்யரூபிணி தன்னுடைய வேலைகள் அனைத்தையும் முடித்த பிறகு, அவ்வப்போது அவள் வீணையை மீட்டுவாள். அவ்வாறு, வீணை மீட்டும் பொழுது, இந்த ஆல்பம் பாடலையும் தன்னுடைய வீணையில் வித்யரூபிணி

வாசித்தாள். இதைப் பார்த்து வித்யரூபிணியின் பெற்றோர் மகிழ்ச்சியுடன் அவளை ஆசிர்வதித்தனர்.

தன்னுடைய வீணையை மீட்டி அதன் இசையினை கேட்கும் பொழுது, வித்யரூபிணிக்கு எப்பொழுதும் ஒரு அளவில்லா மகிழ்ச்சி வரும். இவ்வாறு இருக்கையில் உத்வேகத்தினை கொடுக்கும் இப்பாடலை தன்னுடைய வீணையில் வாசித்து வித்யரூபிணி அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள்.

இன்னும் சில மாதங்களில் பத்ம விருதுகள் வழங்கும் விழா நடைபெறவிருந்து. வித்யரூபிணிக்கு விருதினை பற்றிய ஆர்வம் மேலும் அதிகமாகியது. இம்முறை தமக்கு விருது கிடைக்க வேண்டும் என்று வித்யரூபிணி எப்பொழுதும் நினைத்துக் கொண்டே இருந்தாள். இதற்கிடையில், வித்யரூபிணி பத்மஸ்ரீ விருது பெறுவதற்கு தன்னைப் பரிந்துரை செய்ததை அடுத்து, வித்யரூபிணிக்கு விருது பெறுபவர்களை தேர்வு செய்யும் குழுவிடம் இருந்து அவளது பரிந்துரையை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்களை சரிபார்ப்பதற்கு பரிந்துரைக்கு சம்மந்தாமன ஆவணங்களை கேட்டனர். வித்யரூபிணி அனைத்து ஆவணங்களையும் உரிய தேதிக்குள் அவர்களிடம் சமர்ப்பித்தாள். இதை அடுத்து, வித்யரூபிணி இம்முறை தமக்கு விருது கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக நம்பினாள். இரண்டு மாதங்களுக்கு பிறகு, இந்த ஆண்டு பத்ம விருதுகள் பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கபட்டன. அந்த பட்டியலில் வித்யரூபினியின் பெயரும் இடம் பெற்றிருந்தது. தனது பெயரை அந்த பட்டியலில் பார்த்த வித்யரூபிணிக்கு முதலில் அதனை நம்ப முடியவில்லை. உண்மையாகவே விருது வாங்குபவர்களின் பட்டியலில் தம்முடைய பெயர் உள்ளதா என்று மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டே இருந்தாள். இறுதியாக தமக்கு இந்த முறை பத்மஸ்ரீ விருது கிடைக்கவிருக்கிறது என்று உறுதியாக உணர்ந்தாள். தன்னுடைய நீண்ட நாள் கனவு, ஆசை, நிறைவேறப்போவது கண்டு வித்யரூபிணி பெருமகிழ்ச்சி அடைந்தாள். இந்த மகிழ்ச்சியைத் தன்னுடையப் பெற்றோர்களிடம் கூறி பகிர்ந்துக் கொண்டாள். தன்

மகளுக்கு பத்மஸ்ரீ விருது கிடைக்கப் போவதை எண்ணி அவளது பெற்றோர் ஈடில்லா மகிழ்ச்சியும் தனது மகளை எண்ணி பெருமிதமும் கொண்டனர். அந்த நேரம், வித்யரூபிணியின் தாய் கனிஷ்காவிற்கு அவள் 23 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவு நினைவுக்கு வந்தது. அந்த கனவின் அர்த்தம் அன்று தான் கனிஷ்காவிற்கு முழுமையாக புரிந்தது. வித்யரூபிணிக்கு குடியரசு தினத்தன்று பெண்கள் முன்னேற்றத்திற்காக ஒரு கருவி அமைத்ததிற்கும் மற்றும் கல்வித்துறைக்கான பத்மஸ்ரீ விருதும் கிடைக்கப் பெற்றது.

வித்யரூபிணியின் தொடர் முயற்சி, நம்பிக்கை, விடாமுயற்சி அவளது கனவை நினைவாக்கியது. ஒருவருடைய கனவினை நிறைவேற்றும் சக்தி, மற்றும் தன்னை நோக்கி நிற்கின்ற கேள்விக்குறிகளின் மேல்பாகத்தை உடைத்து அதனை ஆச்சரியக்குறியாக மாற்றும் சக்தியும் விடாமுயற்சியே ஆகும். வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கும் ஒருவர், முதலில் தங்களுடைய பலம் மற்றும் பலவீனத்தையும் அறிந்துக் கொள்ளவேண்டும். மேலும் தம்முடைய பலவீனத்தை எவ்வாறு பலமாக மாற்றலாம் என்றும் சிந்திக்க வேண்டும். நம்முடைய எண்ணம் தூய்மையாக இருந்தால், நாம் செல்லுகின்ற வழியும் நேர்மையான வழியாக இருந்தால், தம்முடைய வழியில் எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை தகர்த்தெறியும் சக்தி தமக்கு தானாகவே வரும். எனவே, யாராக இருந்தாலும், தம்முடைய திறமையினை அறிந்து அதனை சரியான முறையில் செயல்படுத்தி விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும், நேர்மையான வழியில் செயல்பட்டால் வெற்றி என்பது நிச்சயமாகும்.